மே - ஜூன் 2023
தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசமுள்ள பெண்கள்

விசுவாசம் கொண்ட பெண்கள் • குணசாலியான ஸ்திரீகள்

அறிவுப் பெற்ற தேவனுடைய ஊழியர்கள் • சுயகட்டுப்பாடு கொண்ட ஸ்திரீகள்

பொறுமையான ஸ்திரீகள் • தேவபக்தி • அன்பு, அகாபே மற்றும் ஃபிலியோ

ஒரு தாயின் அன்பு

# ஆதியிலே வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசமுள்ள பெண்கள்



ஹெரால்டின் இந்த இதழ், அப்போஸ்தலனாகிய பேதுருருவின் ஆவியின் எட்டு கிருபைகளின் (2பேதுரு1:5-8) கண்ணாடி வில்லை மூலம் வேதத்திலுள்ள விசுவாசமுள்ள பெண்களின் வாழ்க்கை மற்றும் உதாரணங்களைக் கொண்டாடுகிறது. ஒவ்வொரு எழுத்தாளருக்கும் அந்த கிருபைகளில் ஒன்று ஒதுக்கப்பட்டு, அந்த கிருபையை எடுத்துக்காட்டும் வேதத்திலுள்ள விசுவாசமுள்ள பெண்களைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

வேதத்தில் உள்ள அனைத்து விசுவாசமுள்ள பெண்களின் அகரவரிசை சேருகல் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தச் செருகல் வாசகருக்கு எளிதாக அகற்றி, எதிர்காலக் குறிப்புக்காக அவர்களின் வேத புத்தகத்தில் வைத்துக்கொள்ளும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. விளக்கப்படத்தில் பட்டியலிடப்பட்டுள்ள 52 பெண்களில் 25பேரை கட்டுரைகள் கருதப்படுகிறார்கள். "விசுவாசமுள்ள பெண்கள்" என்ற பாடம் யெப்தாவின் மகள், ராகாப், இயேசுவின் தாயான மரியாளையும் கருதுகிறது. இவ்விருவரும், முன் எப்போது நிகழ்ந்திராத, வாழ்க்கையை மாற்றும் அனுபவங்களின் நிமித்தம் விசுவாசத்துடன் எவ்வாறு நடந்துக்கொண்டார்கள் ? இதேபோன்ற நெருக்கடியில் நாம் இருந்தால் எவ்வாறு நடந்துக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் நமக்கு கற்றுக்கொடுகிறார்கள்.

"நல்லொழுக்கமுள்ள பெண்கள்" என்ற பாடம் லேயாளையும், இயேசுவின் தாயான மரியாளையும் பரிசோதிக்கிறது. எல்லா முரண்பாடுகளையும் மீறி, அவர்கள் தேவனுக்கு அடிபணிந்ததன் மூலம் எவ்வாறு நல்லோழுக்க வாழ்வு கிடைத்தது ? நமது குணலட்சங்களை, உளியைக் கொண்டு செதுக்குதல் எவ்வாறு நம் வாழ்வில் நல்லொழுக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதை விவரிக்கிறது.

"ஞானத்தின் மூலம் தேவனின் ஊழியர்கள்" என்ற பாடம், ஏவாள்,ராகாப், மார்த்தா மற்றும் பெத்தானியாவின் மரியாள் மற்றும் பிரிஸ்கில்லா ஆகியவர்களை கருதுகிறது. அவர்களுக்கு என்ன தெரியும் ? அவர்கள் தங்கள் ஞானத்தை கொண்டு எவ்வாறு செயல்பட்டார்கள் ? அவர்களின் ஞானத்தின் வளர்ச்சி எவ்வாறு அவர்களை தேவனிடம் நெருங்கச் செய்தது ?என்பதை விவரிக்கிறது.

"இச்சையடக்கம் கொண்ட பெண்கள்" என்ற பாடம் ஏவாள், அபிகாயில், சாராள் மற்றும் ரூத்தை பற்றி பேசுகிறது. இச்சையடக்கம் என்பது ஒரு நல்ல மனதுடன் இணைந்த சுய - ஒழுக்கம் என்பதை ஒவ்வொருவரும் எவ்வாறு நமக்குக் காட்டினார்கள் ? இந்தப் பெண்கள் தன்னம்பிக்கையிலிருந்து இச்சையடக்கத்திற்கு எப்படி மாறினார்கள் ?என்பதை காட்டுகிறது.

"பொறுமையுள்ள பெண்கள்" என்ற பாடம், எஸ்தர், தீர்க்கதரிசியாகிய அன்னாள், இயேவின் தாயார் மரியாள், சூனேமியப் பெண்ணரிய யோகபேத் மற்றும் சாரிபாத்தை சேர்ந்த விதவை ஆகியோரைப் பற்றி பேசுகிறது. இந்த உண்மையுள்ள பெண்கள் ஒவ்வொருவரிடமும் பொறுமை எவ்வாறு வலிமையையும் குணலட்சணங்களையும் வளர்த்தது ?என்பதை விவரிக்கிறது.

"தேவபக்தி" என்ற பாடம் தெபொராள், நகோமி, எஸ்தர் மற்றும் மகதலேனாள் மரியாள் ஆகியோரை கருதுகிறது. தெய்வபக்திக்கான அர்ப்பணிப்பு அவர்களை நல்வாய்ப்புகளுக்கு எவ்வாறு தயார்படுத்தியது ? சில பேரழிவுகளை எதிர்கொள்ளும் போது, பயத்தை தேவபக்தி எவ்வாறு வென்றது ?என்பதை காட்டுகிறது.

"அன்பு, அகாபே மற்றும் ஃபிலியோ" என்ற பாடம் ரெபேக்காள், தெபொராள், பெயரிடப்படாத ஞானமுல்ல ஸ்திரி, நாமானின் பெயரிடப்படாத பணிப்பெண், யோசேபா மற்றும் இயேசு கிருபை காட்டிய பாவமுள்ள பெண் ஆகியோரை பற்றி விளக்குகிறது. இந்தப் பெண்கள் இரண்டு விதமான அன்பை வெளிப்படுத்தி எவ்வாறு தேவனை பிரியப்படுத்தினார்கள் ?என்பதை விவரிக்கிறது.

"ஒரு தாயின் அன்பு" என்ற பாடம், தம் மகனின் உயிருக்காக எலிசாவிடம் மன்றாடிய சூனேமியப் பெண்ணை கண்ணோக்குகிறது. இந்த அனுபவம் இஸ்ரயேலுக்கான தேவனின் அக்கறையின் தீர்க்கதரிசன பாடங்களைக் கொண்டுள்ளது. எலிசாவின் முதல் முயற்சி ஏன் போதவில்லை ? விசுவாசத்தின் இரண்டாவது சோதனையையும் அதற்கான அற்புதமான பலனையும் அது எவ்வாறு அளித்தது ?என்பதை காண்கிறது.

இதில் உள்ள வலிமைமிக்க கதைகளை கருத்தில் கொள்வது உங்கள் விசுவாசத்தை அதிகரிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## மே / ஜுன் 2023, தொகுப்பு எண் 105, எண் 3


**விசுவாசம் கொண்ட பெண்கள்** 2
விசுவாசம், ஒரு அடித்தளம்

**குணசாலியான ஸ்திரீகள்** 8
அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது

**அறிவுப் பெற்ற தேவனுடைய ஊழியர்கள்** 12
அறிவு மற்றும் தேவனுடைய பெண்கள்

**சுயகட்டுப்பாடு கொண்ட ஸ்திரீகள்** 17
தேவனுக்கு அடிப்பணிதல்

**பொறுமையான ஸ்திரீகள்** 21
உங்கள் பொறுமையில், உங்கள் ஆத்துமாக்களை ஆட்கொள்ளுங்கள்

**தேவபக்தி** 26
தேவபக்தி என்பது பெரிய ஆதாயம்

**அன்பு, அகாபே மற்றும் ஃபிலியோ** 32
தேவன் அன்பாகவே இருக்கிறார்

**ஒரு தாயின் அன்பு** 37
மேலோட்டமான தீர்க்கதரிசனங்கள்

**இன்றைய தீர்க்கதரிசனம்** 41
உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கிறது ஒரு வருடமான போர்

# விசுவாசம், ஒரு அடித்தளம் விசுவாசம் கொண்ட பெண்கள்



*Matt Kerry*

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுதப்படுகிறது." (ரோமர் *1:17*)

**தே**வன் தம்மை நேசிப்பவர் களையும், விசுவாசிப்பவர் களையும் பாராட்டுகிறார். (நீதிமொழிகள் 3:5-10) அவர்கள் அவருடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்கள். (சங்கீதம் 116:15) அவர்களின் வாழ்க்கையும் விருப்பமும் தேவனுக்கு சமர்ப்பிக்கப்படுவதால், அவர் அவர்களுக்குள் ஒரு நிலையான விசுவாசத்தை வளர்க்கிறார்.

விசுவாசம் மற்றும் கிரியைகள் இரண்டின் முக்கியத்துவத்தை அப்போஸ்தலனாகிய பவுலும், யாக்கோபும் விவரிக்கிறார்கள். விசுவாசம் இன்றிய மையாதது. ஆனால் உண்மையான விசுவாசம், அதை செயலாற்றும் கிரியைகளினால் நிரூபிக்கப்படுகிறது. எனவே, "கிரியை இல்லாத விசுவாசம் செத்தது "என்று யாக்கோபு கூறுகிறார். (யாக்கோபு 2:20) நம்முடைய பரலோகத் தகப்பனிடம் கொண்ட பக்தியும், வாழ்க்கைக்கும் இசைவாக செயல் படக்கூடிய விசுவாசம் நம்மைத் தூண்ட வேண்டும்.

வேதாகமம் புருஷரைப் பற்றி அடிக்கடி பேசுகின்றன. அதுபோல பல ஸ்திரீகளைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கை மற்றும் நடத்தை அவர்களின் நம்பிக்கைக்கு சாட்சியமளிக்கிறது - நியாயாதிபதிகள், சீஷர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் கன்காணிகள். இவர்கள் நம்முடைய பாராட்டுக்கும் முன்மாதிரிக்கும் தகுதியான உன்னதமான எடுத்துக் காட்டானவர்கள். அவர்களின் எடுத்துக்காட்டுகள் நமக்கு உதவிகரமான சுயபரிசோதனைக்கு வழிவகுக்கும். நம்முடைய விசுவாசம் உறுதியானதா? நாம் விசுவாசத்தால் தூண்டப்படுகிறோமா ? அவர்களைப் போலவே நாம் தேவனுடைய சித்தத்திற்கு அடிபணியத் உந்தப்படுகிறோமா?

ராகாப், யெப்தாவின் மகள் மற்றும் இயேசுவின் தாயான மரியாள், தேவனுடைய சித்தத்தின் முக்கியத்துவத்தைக் காட்டும் ஆதரவு வேலைகளுடன் உறுதியானவிசுவாசத்தை வெளிப்படுத்தினர். இந்த ஸ்திரீகளின் விசுவாசம் தேவனுடைய சித்தத்தில் அவர்கள் நம்பிக்கையை நிரூபிக்கிறது, இது அவர்களின் வாழ்க்கையில் வியத்தகு மற்றும் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தியது.

**ராகாப்**



*Rahab, helping the spies*

எகிப்திலிருந்து இஸ்ரயேல் தப்பியோடியது மற்றும் எமோரியர்கள், பாசான் மற்றும் பிறர் மீது அவர்கள் பெற்ற இராணுவ வெற்றிகள் புகழ் பெற்றவை. ராகாப் தேவனுடைய பாதுகாப்பைப் பற்றி அறிந்துகொண்டு, தன் தேசம் முழுவதும் தங்கள் தேவனுக்கு பயந்துகொண்டிருப்பதை இரண்டு உளவாளிகளுடன் பகிர்ந்துகொண்டாள். "கேள்வப் பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்கு, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப் போயிற்று, உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமிலும் தேவனானவர் "இப்போதும் நான் உங்களுக்குத் தயவு செய்தபடியினால், நீங்களும் எங்கள் தகப்பன் குடும்பத்துக்குத் தயவு செய்வோம் என்று கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டு..."(யோசுவா 2:10-11)

எரிகோவில் உள்ள ஒருவர் சர்வவல்ல மையுள்ள தேவனை அங்கு வணங்காதபோதிலும், அவருடைய வல்லமையை நம்புவது அவசியமாக இருந்தது. ஆனால் அதற்கும் மேலாக ராகாபின் விசுவாசம் கிரியைச் செய்வதற்கு தூண்டியது குறிப்பிடத்தக்கது. கானானின் தலைவர்கள் ராகாபின் துரோகத்தை அறிந்திருந்தால், அவள் கொல்லப்பட்டிருப்பாள். ராகாப் தனது நகரத்தை அழிக்க வந்த ஒற்றர்களுக்கு அடைக்கலம் மற்றும் தப்பிப்பதற்கான வழிகளை வழங்கியது பெரும் ஆபத்து மற்றும் பாதிக்கப்படக்கூடிய செயலாகும். இதற்கு மிகுந்த விசுவாசம் தேவைப்பட்டது. அவளுடைய துணிச்சலான திட்டம் வெற்றிபெறாவிட்டால், அவளுடைய உழைப்பு அனைத்தும் வீணாயிருக்கும். தேவன் நம்மைப் பாதுகாப்பதற்காக "இருக்கிறார்" என்பதை அறிந்துகொள்வதற்கு முன், நம்முடைய தொழில், விருப்பங்கள், வசதிகள், சமூகம், வாழ்க்கை முறை மற்றும் தினசரி நடைமுறைகளை பணயம் வைப்பதை கற்பனை செய்து பாருங்கள். அதாவது நாம் அவரை அறிவதற்கு மன்பே, எல்லாவற்றையும் ஒரே நாளில்



*Jephthan's Daughter*

ஆபத்தில் ஆழ்த்திவிட்டு, வாழ்க்கையை விட்டுவிட முடியுமா? ஒற்றர்களோடு இருந்த தேவனை ஒருவரும் தோற்கடிக்க முடியாது என்ற விசுவாசம் கொண்ட ராகாப் அவர்களுக்கு உதவி செய்ய முடிவெடுத்தாள்.

ராகாப் வல்லமையுள்ள, உறுதியான விசுவாசத்தின் வடிவமாக நிற்கிறாள். அவள் ஒற்றர்களைக் கொன்றுவிட்டு, இஸ்ரயேலர்களுக்கு அச்சுறுத்தும் செய்தியை அனுப்பியிருக்கலாம். அரசியல் ஆதாயத்திற்காக அவற்றை அரசரிடம் ஒப்படைத்திருக்கலாம். ஒரு எளிமையான நபர், தங்கள் வாழ்க்கை முறையைப் பாதுகாப்பதற்று உறுதியாக இருப்பதற்கு, முதலில் அந்த விருப்பங்களை பரிசீலிப்பார். அதற்குப் பதிலாக, ராகாப் உடனடியாக ஒற்றர்களிடம் தான் கேட்ட அற்புதமான விடுதலையைப் பற்றி சொன்னாள்.

ராகாப் தனது பாவங்களை விட்டுவிட்டு, நீதிக்கு உறுதியான ஜனத்துடன் சேர்ந்தது எவ்வளவு உற்சாகமாக இருந்திருக்கும். அவளுடைய முடிவு, தேவனுடைய இராஜ்யத்தின் மதிப்பை விவரிக்கும் விலையேறப் பெற்ற முத்தைப் பற்றிய இயேசுவின் உவமையை நமக்கு நினைவூட்டுகிறது. தேவனுடைய வழிகாட்டுதலின் கீழ் சிறந்த எதிர்காலத்தைப் பெற ராகாப் தனக்குச் சொந்தமான



*Mary, Mother of Jesus*

"எல்லாவற்றையும்" விட்டாள். "என்னைப் பின்பற்றுங்கள்" என்று இயேசு கடற்கரையில் நின்ற அப்போஸ்தலர்களிடம் சொல்லும் வரை, உடனடியாக ஒரு வாழ்க்கை இப்படியாக மாறுவதை நாம் காண முடியவில்லை.

சணல் நூலுக்கு தேவையான மூலப்பொருளான சணல் தட்டகளை வீட்டின் மேல் பரப்பினாள் என்று பதிவுகள் காணப்படுகிறது. ராகாப் அந்த வீட்டின் மேலிருக்கும் சணலைப் போலிருக்கிறாள். சணல் நூல் பரிசுத்தவான்களின் தூய்மையையும், தேவனுடைய முழுமையான வேலையை அடையாளப்படுத்துவது போல, தேவன் ராகாபின் வாழ்க்கையில் செய்யக்கூடிய வெலைகளுக்கு ஆயத்தமாக இருப்பதை குறிப்பிடலாம். அவளுடைய வாழ்க்கையிலும், பரம்பரையிலும், தேவனுடைய வேலைத் தொடர்வதை நாம் காணலாம். அவளுடைய குமாரனாகிய போவாஸ், இயேசுவின் பரம்பரையில் சேர்க்கப்பட்டார். (ரூத் 4:17, மத்தேயு1:5) எப்படிப்பட்ட முன்மாதிரியை ராகாப் நமக்குக் கொடுத்திருக்கிறாள் ! தேவனைத் தேர்ந்தெடுப்பதற்காக நம் உடைமைகள் அனைத்தையும் விட்டுக் கொடுப்பது மதிப்புக்குரியது!

**யெப்தாவின் குமாரத்தி**

ஒரு வேசியின் குமாரனானயெப்தா தன் தந்தையின் விபச்சாரத்தால் பிறந்தவர். இதன் காரணமாக கோபமடைந்த அவனுடைய சகோதரர்கள் அவனை அவர்களுடைய குடும்பத்திலிருந்து வெளியேற்றினார்கள். (நியாயாதிபதிகள் 11:1-2) அவர் தோப் தேசத்திற்கு ஓடிபோனார். ஆனால் யெப்தா ஒரு "வீரமுள்ள போர் வீரனாக" ஆனார். கிலேயாத்தியர்கள் அவரிடம் வந்து அம்மோன் இராஜாவுக்கு எதிராக அவர்களுக்காக போரிடுமாறு கேட்டுக் கொண்டபோது, அவர் அம்மோனுக்கு எதிராக இஸ்ரயேல் படையை கட்டளையிட எழுந்தார். யெப்தாவை வெளியேற்றிய மதிப்பற்றவர்களும் தகுதியற்றவர்களுமான ஜனங்களை பாதுகாக்க, அவர் தனது புதிய நகரமான தோப்பை விட்டு, நாற்பது மதல் ஐம்பது மைல்கள் தெற்கே பயணித்தார்.

போருக்கு முந்தைய இரவு, அவர் வெற்றி அடையும்படி தேவனிடம் விண்ணப்பித்தார். அதோடு, அவரது கோரிக்கையை ஒரு விதியான வாக்குறுதியுடன் முத்திரையிட்டார். "அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி - தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால், நான் அம்போன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்." (நியாயாதிபதிகள் 11:30-31)

யெப்தா தன் வீட்டிலிருந்து தன்னைச் சந்திக்க வெளியே வரும் "எதுவோ" அதை கர்த்தருக்கு பலி செலுத்துவதாக வாக்களித்தது அசாதாரணமானது. இருப்பினும், அந்த காலத்தில் விலங்குகள் சில நேரங்களில் சில வீடுகளின் முதல் மாடியில் வசித்தது. ஒரு ஸ்திரீ "கொழுத்த கன்றுக் குட்டியை" வீட்டில் வைத்திருந்தாள் என்று

1சாமுயேல் **28:24**ல் காணலாம். மேலும் 2சாமுயேல் **12:2-3** லில் சொல்லப்பட்ட உவமையில், "தரித்திரன் ஒருவனக்கு ஒரு சின்ன ஆட்டுக்குட்டி இருந்தது, அது அவனோடும் அவன் பிள்ளைகளோடுங்கூட வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக்கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப்போல் இருந்தது" என்று வாசிக்கிறோம். எனவே, ஏழைகளாக இருந்த சிலர் விலங்குகளை அவர்களுடன் தங்கள் வீடுகளில் வைத்திருந் தார்கள். யெப்தா வீணரான மனுஷரோடு இருந்தார் என்று வசனங்கள் குறிப்பிடுவதினால், அவரும் ஏழையாக இருந்தார் என்று தெரிகிறது. (நியாயாதிபதிகள் 11:3)

எனவே, வீட்டில் விலங்குகள் வசிக்கும் நிலையில், யெப்தா தனது மகள் முதலில் வருவாள் என்று எதிர்பார்க்கவில்லை என்று நாம் நியாயமாக கருதலாம். வீட்டிலிருந்து முதலில் அவள் வெளியே வந்தபோது, தேவனுக்கு செய்த பொருத்தனையை நிறைவேற்றாமல் இருக்கலாமா அல்லது ஒரே போரான குமாரத்தியை தேவனுக்கு பலி செலுத்தலாமா? என்ற கற்பனை செய்ய முடியாத ஒரு மன உளைச்சலை எதிர்கொண்டார். தேவன் மனித பலிகளை வெறுப்பதினால், இந்த பலி அவளுடைய சரீர ரீதியான மரணத்தைப் பற்றி குறிப்பிடப்படவில்லை என்று நாம் கருதுகிறோம். (எரேமியா32:35) இருப்பினும், யெப்தா "தன் வஸ்திரங்களை கிழித்துக் கொள்ளும்" வரை இதை உணராமல் இருந்திருக்கலாம். (நியாயாதிபதிகள் 11:35) இந்த பலி தேவனுடைய ஊழியத்திற்காக அர்ப்பணிக்கக்கூடியதாக இருந்திருக்கும். இப்படியாக, அவள் திருமணம் செய்யாமல் இருந்திருப்பாள். (நியாயாதிபதிகள் 11:37-40) யெப்தாவின் இளம் பிராயத்து மகள், தன் சொந்தக் குடும்பத்தோடு, தன் பிள்ளைகளோடும், தன் மீது அன்பும் அக்கறை காட்டும் ஒரு கணவனோடும் இருப்பாள் என்ற எதிர்நோக்குடன் யெப்தா இருந்திருக்கலாம்.

தன் தவறு ஏதுமின்றி, யெப்தாவின் வாழ்க்கையில் அனுபவத்த துன்பங்கள், அவரது தந்தையின் தவறான தேர்வின் காரணமாக அவரது சகோதரர்களால் தொடர்ந்து அவமதிக்கப்பட்டார். நிச்சயமாக, அவருடைய மகள் அவரை விட மிகச் சிறந்த வாழ்க்கையை அனுபவிக்கவேண்டும் என்ற தாழ்மையான நம்பிக்கை இருந்தாலும், தேவன் வேறு திட்டங்களை வைத்திருந்தார்.

நம்முடைய பரலோகத் தகப்பனுக்கேற்ற மனத்தாழ்மை மற்றும் விசுவாசத்தை வெளிப்படுத்தும் ஈர்க்கக்கூடிய பதில்களில் ஒன்று யெப்தாவின் மகளுடைய வார்த்தைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. "அப்பொழுது அவள் - என் தகப்பனே, நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்து பேசினீரல்லவோ ? அம்மோன் புத்திரராகிய, உம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும் ஜெயத்தைக் கர்த்தர் உமக்குக் கட்டளையிட்டபடியினால், உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும் என்றாள்." (நியாயாதிபதிகள் 11:36) யெப்தா தேவனுக்கு ஆரம்பத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற அவளை பலி செலுத்தவேண்டும் என்று ஒருவேளை நினைத்திருக்கலாம். அப்படியானால், மகளின் அமைதியான குரலும், தேவனுடைய தன்மை மற்றும் அவருடைய அன்பைப் பற்றிய அவளது புரிதலானது, தேவனுக்கு ஊழியம் செய்வதன் மூலம் அவளுடைய ஜீவனுள்ள பலி நிறைவேறும் என்பதை அவள் தந்தைக்கு உணர்த்தியிருக்கும். இந்த ஊழிய வாழ்க்கையை அவள் உடனடியாக ஏற்றுக்கொண்டது மிகுந்த விசுவாசத்தை வெளிப்படுத்தியது.

அவளுடைய வாழ்நாள் முழுவதற்கும் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. "தேவன் என் தந்தைக்கு

என்ன செய்தார் என்பதை அறிவேன் அதற்காக என் தந்தை செய்த பொருத்தனையை நான் நறைவேற்றுவேன்." என்பதே அவளுடைய பதிலாக இருந்தது. இந்த இளம் பெண் தன் வாழ்க்கையை தேவனுடைய கைகளில் ஒப்படைத்தாள். இளம் வயதில் இது ஒரு குறிப்பிடத்தக்க விசுவாசத்தின் வலிமையை வெளிப்படுத்துகிறது. தேவனிடத்தில் தன் தந்தை கொடுத்த வாக்குறுதிக்கு அவளுடைய கீழ்ப்படிதலானது, அவள் தேவன் மீதும், தந்தையின் மீதும் வைத்த அன்பு, மரியாதை, புரிதல் மற்றும் தன்னலமற்ற தன்மையைக் காட்டுகிறது. அவளுடைய தந்தையின் நோக்கங்கள் தூய்மையானவை என்பதையும் இது காட்டுகிறது. மேலும் இந்த நிகழ்வுகளை தேவனே ஏற்பாடு செய்தார் என்றும் அவள் நம்பினாள்.

இதில் நமக்கு ஒரு பாடம் மறைந்திருக்கிறது. வேதாகமத்தில் மிகவும் பிரியமான செயல்களில் ஒன்று இந்த இளம் பெண்ணின் செயல், ஆனால் அவள் பெயரோ பதிவிடப்படவில்லை. "ஒன்றும் இல்லை நான் என்று" என்ற பாடலை நினைக்கும்போது, அவளுடைய சுயநலமற்ற தன்மையை நினைவில் கொள்வோம். அவள் தந்தை அவளுக்குத் தெரியாமலேயே தேவனுக்கு வாக்களித்ததை அவள் அறிந்த போதிலும், தன் முழு விருப்பத்துடன் அந்த வாழ்க்கையை ஏற்றுகொண்டு,பரலோக பிதாவின் சித்தம் செய்வதே தன் மனமகிழ்ச்சி என்று, தன்னை விசுவாசத்துடன் அர்ப்பணித்தாள். நாமும் எந்தவிதமான "முணுமுணுப்பு அல்லது மறுபரிசீலனை" இல்லாமல் நம் வாழ்வில் தேவனுடைய வழிநடத்துதலை ஏற்றுக் கொண்டதை, நம்முடைய விசுவாசம் மற்றும் நம்பிக்கையினால் வெளிப்படுத்துவோம். பழைய ஏற்பாட்டின் யெப்தாவின் மகளின் வார்த்தைகளுக்கு செவி கொடுத்து, நம்மை கர்த்தருக்கு அர்ப்பணிப்பதில் அவளுடைய முன்மாதிரியைப் பின்பற்றுவோம். அது நம்முடைய வாழ்க்கைக்கு தகுதியுள்ள எடுத்துக்காட்டாகும்.

**மரியாள், இயேசுவின் தாய்**

"அதற்கு மரியாள் - இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.." (லூக்கா1:38) இவைகள் தேவனுடைய விருப்பங்களை முன்வைத்த ஒரு ஊழியக்காரியின் வார்த்தைகளாகும். மரியாளின் வார்த்தைகள் முழுமையான பக்தி, கீழ்ப்படிதல், அன்பு மற்றும் விசுவாசம் நிறைந்ததாக இருந்தது. அவருடைய நம்பிக்கையும் விசுவாசமும், தேவன் தகுதியுள்ளவர் என்பதை வெளிப்படுத்தியது. காபிரியேல் தூதன், நீண்ட காலமாக எதிர்ப்பார்த்த தேவனுடைய குமாரனாகிய மேசியாவின் தாயாக இருப்பாய் என்று மரியாளுக்கு அறிவித்த பிறகு, தேவனுடைய ஊழியர்களின் தாழ்மையான மற்றும் ஏற்றுக்கொள்ளும் விசுவாசம் பரிசுத்தமானது என்பதை அவளுடைய வார்த்தைகளை காட்டியது. இந்த வார்த்தைகளைப் படிக்கும்போது நம் இருதயம் எவ்வளவு மகிழ்ச்சியால் துள்ளுகிறது. நம் ஆண்டவர் நம்மைக் காப்பாற்ற பிறப்பதற்கு, இந்த நல்லொழுக்கமுள்ள இளம்பென் அவரை பெற்று வளர்க்கும் பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள்.

"விசுவாசமில்லாமல், அவருக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம்."(எபிரெயர் 11:6) மரியாளுக்கு முதலில் விசுவாசம் இருந்ததினால் மட்டுமே தேவனுடைய தயவைக் கண்டறிய முடிந்தது. எனவே காபிரியேல், "மரியாளே,பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்..."என்று மரியாளிடம் கூறினார். (லூக்கா1:30) அவள் கொண்டிருந்த விசுவாசம், ஆவியின் கனியில் ஒன்றாகும். அவள் உண்மையில் அதை நம்பி, அந்த விசுவாசத்தின் படி வாழ்ந்தாள். மரியாளின் எளிமையான நன்றியுணர்வின் வார்த்தைகள் இன்று நம்மிடையே எதிரொலிக்கின்றது. ஆபிரகாமைப்

போலவே, அவளுக்கும் அதிசயமாக ஒரு குழந்தை பிறக்கும் என்று கூறப்பட்டது. எஸ்தரைப் போலவே, அவளும் நிச்சயிக்கப்பட்டவருக்கு ஒரு கடினமான உண்மையை வழங்குவாள். மேலும் அதற்கு சாதகமான பதில் பெறப்படும் என்று தேவனுடைய பாதுகாப்பில் அவர் நம்பிக்கை வைத்தாள்.

அவள் ஒரு துரோகி என்ற வாந்தி பரவியிருந்தால் அவள் எவ்வளவு ஆழமான அவமானத்தை அனுபவித்திருக்க வேண்டும். சட்டத்தின்படி அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டியவள். ஆனால் இந்த விஷயங்களைப் பற்றி கவலைப் படுவதற்கு பதிலாக, அவள் யோசேப்பிடம் காபிரியேல் சொன்ன செய்தியை அறிவித்தாள். மேலும் யோவான் ஸ்நானகனின் மற்றொரு அதிசயமான வெளிப்பாட்டை காண அவள் மகிழ்ச்சியுடன் தன் இனத்தாளாகிய எலிசபெத்திடம் சென்றாள். இந்த இரண்டு பெண்களும் எவ்வளவு மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டிருக்க வேண்டும் - இது அவர்கள் ஒன்றாக அனுபவித்த நம்பிக்கையின் நெருக்கமான உறவாகும். தேவனுடைய திட்டங்கள் நம் வாழ்வில் வெளிப்படுவதைக் காணும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு மரியாள் நமக்கு ஒரு சிறந்த உதாரணத்தைக் காட்டினார். தேவன் நமக்கு வழிநடத்துதலைக் கொடுக்கும்போது என்ன தவறு நடக்கக்கூடும் என்பதைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது. அதற்குப் பதிலாக நமது புரிதல் மற்றும் முன்னறிவக்கும் திறனுக்கு அப்பால், எது சரியாக நடக்கும் என்பதில் அவருடைய நம்பகத்தன்மைக்காக நாம் அவரைப் பாராட்ட வேண்டும். தேவன் நம்கமானவர்.

நம்முடைய எதிர்காலத்திற்கான தேவனுடைய திட்டங்களின் ஒவ்வொரு விவரத்தையும் நம்மால் பார்க்கமுடியாததால், நாம் அவரை நம்பி, அவருடைய வழிகாட்டுதலைப் பின்பற்றவேண்டும்.

சில சமயங்களில் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை மற்றவர்களுக்குச் சொல்ல நாம் பயப்படுகிறோமா ? சகோதரர்கள் அல்லது மற்றவர்களிடமிருந்து தனித்து செயல்பட நாம் பயப்படுகிறோமா ? நில நேரங்களில் நம்முடைய நிதி மற்றும் உலகத் தொழில்களை குறித்து நாம் கவலைப்படுகிறோமா ? வாழ்க்கை மற்றும் உலக விவகாரங்களுக்கான திட்டங்களும் யோசனைகளும் நமக்கு உண்டா ? சிந்தனைகளை மாற்றும் ஒரு துணைக்கருவிகாள உதவும். நம் வாழ்க்கை மற்றவர்களால் வாசிக்கப்பட்டால், அவர்களின் விசுவாசத்தை தூண்டி, அவர்களின் குணத்தைப் பலப்படுத்துமா அல்லது தேவனுக்குச் சேவை செய்யத் தங்கள் வாழ்க்கையைத் துறக்க அவர்களைத் தூண்டுமா ? இந்த விசுவாசமுள்ள பெண்களின் வாழ்க்கை தேவன் மீது நம் விசுவாசத்தை ஊக்குவிக்கிறதா ? பெரும்பாலான ஜனங்கள், ராகாப், யெப்தாவின் குமாரத்தி அல்லது இயேசுவின் தாய் மரியாள் போன்ற சாட்சிகளை எதிர்கொள்ளவே மாட்டார்கள். இருப்பினும், தேவன் தம்முடைய விசுவாசமுள்ள சீஷர்கள் ஒவ்வொரு வரிடமும், "உங்கள் ஜீவனை கொடுப்பீர்களா ? " என்று அழைப்பு விடுக்கிறார். நீங்கள் கொண்டிருந்த உலகத்தின் "விருப்பங்களை" தேவன் மேலுள்ள விசுவாசத்தின் "விருப்பமாக" மாறும் வரை உங்கள் மனதைப் புதுப்பிப்பதற்கு உங்களை அர்ப்பிணிக்க வேண்டும். (ரோமர் 12:2)

விசுவாசத்தின் வாழ்க்கையே ஒரு பயனுள்ள வாழ்க்கை தொடங்கும் இடம் என்று தேவனுடைய விசுவாசமுள்ள பெண்கள், நமக்குக் காட்டுகிறார்கள். இந்த உலகம் வழங்கும் எதையும் விட தேவனைச் சேவிப்பது உற்சாகமாகவும் நிறைவாகவும் இருக்கும் என்று நாம் முதலில் நம்பாத வரையில், நாம் தேவனிடம் செல்லும் இடுக்கமான வழியில் நடக்கத் தொடங்க முடியாது. இந்தப் பெண்களின் வாழ்க்கைகளை கவனிப்போம், ஆவியில் தூண்டப்படுவோம், விசுவாசத்தில் பலப்படுவோம், தேவனுடைய சேவையில் நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்.

# அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது குணசாலியான ஸ்திரீகள்



**_Micah Hess_**

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி..." (2பேதுரு *1:3*)

நம்முடைய உருமாற்றத்தின் இரண்டாவது படியாக "நற்குணம்" (நல்லொழுக்கம்) (Strong's G703, *arete*, excellence) என்ற வார்த்தையை, சுவிசேஷ யுக சபைக்கான கட்டளையாக அப்போஸ்தலர் பேதுரு பயன்படுத்துகிறார். இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டிலிருந்து தப்பிக்க உதவும் குணநலன்களை வளர்த்துக் கொள்ள தேவையான அனைத்து கருவிகளையும் தேவன் தனது தெய்வீக வல்லமையின் மூலம் நமக்குத் தருகிறார் என்று அவர் நமக்குத் தெரிவிக்கிறார்.

விசுவாசமும் நல்லொழுக்கமும் (நற்குணம்) ஆவிக்குரிய வளர்ச்சிச் செயல் முறையைத் தொடங்குகின்றன என்று பேதுரு எழுதுகிறார். (1பேதுரு1:5) ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலைத் தொடர்ந்து, தேவன் மேலுள்ள விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் பலமாக வளரும்போது, தேவனுடைய பிள்ளைகளாக நாம் ஒரு புதிய அடையாளத்தைப் பெறுகிறோம். மேலும் அவருடைய சர்வவல்லமையின் அடைக்கலத்தை அனுபவித்து மகிழ்கிறோம். (மத்தேயு11:28) "ஆவியில் நடக்கவும்", "மாம்சத்தின் இச்சையை" எதிர்த்து, நம்முடைய "அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும்" உறுதி செய்வதற்கு நம்முடைய குணத்தை மாற்றுவதற்கு ஆரம்பமே இந்த விசுவாசமும், நற்குணமுமே. (கலாத்தியர் 5:16, 2பேதுரு1:10-11)

பேதுருவின் கட்டளைக்கு முன், பழைய ஏற்பாட்டின் விசுவாசமுள்ள ஸ்திரீகள் மற்றும் ஆரம்பகால சபை நற்குணத்தை நோக்கி வழிநடக்க பழைய ஏற்பாட்டில் தாவீதின் வார்த்தைகள் இருந்தது. "கர்த்தரை நம்பி நன்மை செய், சேத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்."(சங்கீதம் 37:3-4) வேதாகமத்தில் நற்குணம் உள்ள பெண்களின் உதாரணங்களில் இரண்டு நபர்கள் தனித்து நிற்கிறார்கள்.

இந்த இருவரும் தேவனுடைய பார்வையில் குணசாலிகளாக இருந்தபோதிலும், உலகம் அவர்களை வித்தியாசமாக பார்த்தது. அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய ஆய்வில் அவர்களின் வேற்றி தேவனுடைய அன்பான பிள்ளைகள் என்ற அடையாளத்துடன் பிணைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.



*Mary, Mother of Jesus*

## இயேசுவின் தாய், மரியாள்

வல்லமையுள்ள தூதனாகிய காபிரியேல் இயேசுவின் தாயான மரியாளை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். (லூக்கா1:26-38) தேவன் மரியாளுக்கு பெரிதான அனுக்கிரகம் செய்தார் என்ற செய்தியை காபிரியேல் அவளுக்கு அறிவித்து அவளை ஆச்சரியத்திற்குள்ளாக்கினார். அது அவளை குழப்பமடைச் செய்தது. அவளுடைய எதிர்வினை சந்தேகத்தின் அறிகுறியாக இல்லை, ஒருவேளை மரியாள் காபிரியேலின் மகிமையால் வியப்படைந்திருக்கலாம். நிச்சயமாக, தேவனுடைய பரலோகத்திலிருந்து இவ்வளவு உயர்ந்த பாராட்டுகளைப் பெறுவது அவளுக்குப் பழக்கமில்லாதிருந்தது. மரியாளின் ஒருமுகப்பட்ட ஆச்சரியமும், பிரமிப்பும் அவளுடைய மனத்தாழ்மையைக் காட்டுவதாக இருந்தது.

தேவனுடைய தயவு மரியாளுக்கு உறுதியளித்த பிறகு, காபிரியேல் தான் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தினார் : மேசியாவின் வருகையைக் குறித்த முக்கியமான அறிவிப்பு. தாவீதின் வம்சத்தில் வரும் முடிவில்லா இராஜ்யத்தின் இராஜாவின் தாயாக அவள் இருக்கவேண்டும். அவள் மேசியாவின் தாயாக இருக்க வேண்டும், இது நீண்ட காலமாக யூதப் பெண்கள் எதிர்பார்த்து ஜெபித்த ஒரு மரியாதைக்குரிய காரியமாக இருந்தது.



*Mary with her miracle baby*

அவள் எந்த புருஷனையும் அறியாததினால், இது எப்படி நிகழும் என்ற மரியாளின் புரிதலுக்கான தேடலில், அவளது விசாரணையும் அடங்கும். இங்கு, தேவனுடைய தெய்வீக வல்லமையினால் இந்த அதிசயம் நிகழும் என்று காபிரியேல் மரியாளுக்கு அறிவித்தார். அவளுடைய குமாரன், யோசேப்பு அல்லது எந்த பூமிக்குரிய தகப்பனிடமிருந்தும் வரமாட்டார். மாறாக, அவளுடைய குமாரன் தேவனுடைய குமாரனாக இருப்பார். தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை மரியாளின் மீது அனுப்புவார், இதனால் இந்த குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவார்.

தேவனால் முடியாத காரியம் எதுவுமில்லை என்பதை காபிரியேல் மெதுவாக மரியாளுக்கு நினைவூட்டினார். (லூக்கா1:37) "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்..." (லூக்கா1:38) என்பதே மரியாளின் கடைசி வார்த்தைகளாக இருந்தது. இந்த வார்த்தைகளில், மரியாளின் நற்குணம், தேவன் மேலுள்ள விசுவாசம், நம்பிக்கை வெளிப்படுகிறது. மேலும், தேனுடைய விருப்பத்திற்கு அவள் முழுமையாகக் கீழ்ப்படிவதை காண்கிறோம்.

ஆனால் அவளுடைய பாதை எளிதாக இருக்கவில்லை. அவளிடம் நிச்சயமாக இன்னும் பல கேள்விகள் இருந்தாலும், இப்போதைக்கு தேவனிடமிருந்து காபிரியேலின் செய்தியின் அடிப்படையில் உள்ள விசுவாசத்துடன் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றாள்.

தேவனுக்கு அடிபணிவதில் மரியாளின் உதாரணம் மனதைக் கவருகிறது. நம்முடைய சமுதாயத்தில் சமர்ப்பணம் என்பது ஒரு நற்பண்பின் மதிப்பை பெறுவதில்லை. மாறாக, அர்ப்பணிப்பை ஒரு பலவீனமாக இந்த உலகம் பார்க்கிறது. மரியாளைப் போலவே, தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாக



*Leah, first wife of Jacob*

கீழ்படிவதே நம்முடைய உண்மையான நோக்கத்தைக் கண்டுபிடித்து வாழ்வதற்கான ஒரே வழி என்று வேதத்தின் மூலம் அறிந்திருக்கிறோம். அர்ப்பணிப்பு நம்முடைய பரிசுத்தமாக்குதலில் ஒரு முக்கியமான படியாகும்.

கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்குக் கொடுத்த அடையாளத்திற்கு நம்மை நாம் கீழ்படுத்தம்போது, முழுமையான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையுடன் நோக்கத்தைக் கண்டறிவது வரும் என்பதை மரியாள் நமக்கு காட்டுகிறார். மரியாளின் தூய்மையான குணம் (நன்மையுடன் கூடிய ஒழுக்கம்) தேவனால் அங்கீகரிக்கப் பட்டது, மேலும் அவள் நம் ஆண்டவர் மற்றும் இரட்சகரின் தாய் என்ற நம்பமுடியாத மரியாதையைப் பெற்றார். அந்த மரியாதைக்கு அவள் விசுவாசத்துடனும் பணிவுடனும் பதிலளித்தாள்.

இந்த நிகழ்வுக்கு சில மாதங்களுக்கு முன்பு, காபிரியேல் யோவான் ஸ்நானகனின் தந்தையிடம் அனுப்பப்பட்டார். இருப்பினும், அந்த சந்திப்பு சற்று வித்தியாசமாக இருந்தது. சகரியா காபிரியேலிடம் அவநம்பிக்கையுடன் பதிலளித்தார், அதற்காக அவரது மகன் யோவான் ஸ்நானகன் பிறக்கும் வரை அவர் ஊமையாக இருந்தார்.

அதிசயமாக கர்ப்பம் தரிப்பது சாத்தியமில்லை என்று நம்புவதாக மரியாள் காபிரியேலுக்கு எதிர்வினை அளித்திருக்கலாம். அப்படியோரு மரியாதை தனக்கு கிடைக்குமா என்று அவள் சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்கு பதிலாக மரியாள், தேவனுடைய வார்த்தைக்கு பணிவான சமர்ப்பிக்கக்கூடிய ஒரு சிறந்த பாதையை அவள் தெரிந்தெடுத்தாள். தேவனுடைய விருப்பத்திற்கு மரியாள் அடிபணிவதன் மூலம், கிருபையும் இரக்கமும் உலகம் முழுவதும் வெளிப்பட்டது.

**லேயாள்**

தன்னுடைய இன்னல்களில், நல்லொழுக்கத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க உதாரணம், லேயாள். (ஆதியாகமம் 29:31-35) பிரச்சனையான சூழ்நிலைகளுக்கு மத்தியில் அவள் இருந்தாள். யாக்கோபின் இரண்டு மனைவிகளில் அவள் விரும்பப்படவில்லை. யாக்கோபின் திருமண இரவில் லாபானின் போசடியில் அவள் எந்த அளவிற்கு பங்குகொண்டாள் என்பது நமக்கு தெரியாது. அவள் விருப்பமான பங்கேற்பாளராக இருந்திருக்கலாம் அல்லது அவளது தந்தையால் தவறாக வழிநடத்தப் பட்டிருக்கலாம் அல்லது கட்டாயப்படுத்தப் பட்டிருக்கலாம். ஆனால் ஓரளவு இந்த ஏமாற்றத்தின் காரணமாக, அவள் தனது கணவருடனான உறவில் சிதைவு ஏற்பட்டது. அவள் கணவனால் நேசிக்கப்படவில்லை. இந்த சேதமடைந்த உறவின் உணர்ச்சிகரமான காரியங்கள் பேரழிவை

ஏற்படுத்தியிருக்கவேண்டும். விஷயங்கள் இன்னும் கடினமாவதற்கு, அவரது சகோதரி ராகேல் ஒரு நேரடி போட்டியாளரானார். இரண்டு சகோதரிகள் ஒரே மனுஷனை திருமணம் செய்வது ஒரு புத்திசாலித்தமனான ஏற்பாடு அல்ல, பின்னர் அது மோசே கொடுத்த சட்டத்தில் தடைசெய்யப்பட்டது. (லேவியாராகமம் 18:18)

லேயாளில் துன்பத்தைப் பற்றி தேவன் அலட்சியமாக இருக்கவில்லை. (ஆதியாகமம் 29:31) லேயாளின் மீது இரக்கம் மற்றும் அக்கறையின் வெளிப்பாடாக, தேவன் அவளுக்கு குமாரர்களை கொடுத்தார். இந்த ஆசீர்வாதம் அவளுடைய வலியைக் குறைக்கும் நோக்கத்திற்கு கொடுக்கப்பட்டது.

ஆனால், ஒவ்வொரு முறையும் அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் போது அது அவளுடைய வலியை பெரிதாக்கிதாகத் தெரிகிறது. பிள்ளைகளைப் பெற்றெடுப்பதன் மூலம் யாக்கோபின் அன்பைப் பெறலாம் என்று அவள் இருதயம் எதிர்பார்த்தது.

இருப்பினும், ஒவ்வொரு குமாரனின் பிறப்பும், யாக்கோபுடனான அவளுடைய உறவை சரிசெய்யும் நம்பிக்கை லேயாளுக்கு எட்டாததாக இருந்தது. அவளுடைய முதல் குமாரன் ரூபன் பிறந்தவுடன், தேவன் அவளுடைய அவல நிலையைக் கண்டு அவளுக்கு ஒரு குமாரனைக் கொடுத்ததால் யாக்கோபு அவளை நேசிக்கக்கூடும் என்று அவள் நம்பினாள். அவள் தன் இருதயத்தை தேவனிடம் ஊற்றிக்கொண்டே இருந்தாள், தேவன் அவளைக் கேட்டு, அவள் நேசிக்கப்படவில்லை என்பதை கண்டார். அவளுக்கு சிமியோன் என்ற மற்றொரு குமாரன் பிறந்தான். ஆனாலும் தொடர்ந்து யாக்கோபு அவளை நேசிக்கவில்லை.

மூன்றாவது குமாரன் லேவி பிறந்தபோது, அவள் மீண்டும் யாக்கோபின் அன்பைப் பெறலாம் என்று நம்பினாள். ஆனால் லேயாள் நான்காவது குமாரன் யூதா பிறக்கும்போது, லேயாளிடம் நல்ல மாற்றத்தைக் காண்கிறோம். லேயாள் யாக்கோபுடைய அன்பை எதிர்ப்பார்க்காமல், தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்ற விதத்தில் இந்த மாற்றம் காணப்பட்டது. லேயாள் யாக்கோபின் பாசத்தை பெற தேவன் எவ்வாறு உதவுவார் என்பதில் கவனம் செலுத்தாமல், தான் தேவனிடமாக திரும்பி, "இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி..."(ஆதியாகமம் 29:35)அவரை புகழ்ந்து பேசுவதை தெரிந்தெடுத்தார். லேயாள் தேவனிடம் முழுமையாக அர்ப்பணித்ததால் அவள் மாற்றப்பட்டாள். ஒரு மனுஷனின் அன்பைப் பெறுவதற்குப் பதிலாக, தேவனுடைய அன்பைப் பெறுவதில் திருப்தி அடைய அவள் முடிவு செய்தாள். இந்த மாற்றம் ஏற்பட்ட காரணம் என்ன என்பதை பற்றிய நுண்ணறிவை வேதம் நமக்குத் தரவில்லை என்றாலும், லேயாள் கவனமும் நம்பிக்கையும் யாக்கோபிலிருந்து தேவனிடம் மாறியது.

யாக்கோபுடன் திருமணமான ஆரம்ப காலத்தில், அவளது உணர்ச்சிக் கொந்தளிப்பு எந்த நேரத்திலும் ஒரு புயலாக அவளிடமிருந்து வெடித்திருக்கலாம். ஆனால் அவளது கொந்தளிப்பான அனுபவத்தின் போது அமைதியும் பொறுமையுமாக இருந்தது. (ஆதியாகமம் 29:35) இந்தக் கொந்தளிப்பில் மூழ்குவதற்குப் பதிலாக, லேயாள் எவ்வாறு கிருபையுடன் இந்த கொந்தளிப்பில் நீந்திச் சென்றால் என்பதில் நாம் ஆச்சரியப் படுகிறோம்.

லேயாள் உயிர் பிழைத்து, குணத்தின் வலிமையில் வளர்ச்சி அடைந்தாள். (நற்குணம்) இது அவரது குமாரர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்று முடிவு செய்தது. யாக்கோபின் அன்பைப் பெற தேவன் இந்த ஆசீர்வாதத்தைப் பயன்படுத்த முடியும் என்று நம்புவதற்குப் பதிலாக, அவள் நன்றியுடன் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றாள். குணங்களில் இந்த மாற்றம் அவளை நம்

பரலோகத் தகப்பனின் உண்மையான அடைக்கலத்தில் தஞ்சம் அடைய அனுமதித்தது, மேலும் அது அவளுடைய தீவிரமான உணர்ச்சிக் காயங்களிலிருந்து அவளுக்கு சிறிது ஓய்வு கொடுத்திருக்கலாம்.

ஆனால் லேயாளின் மாற்றப்பட்ட குணங்கள் ராகேல் மற்றும் யாக்கோபு உடனான பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. யாக்கோபின் பாசத்திற்கான போராட்டம் அவர்களது குடும்பத்தை தொடர்ந்து பாதித்தது. ஆனால் அவளுடைய பொருத்தமான அனுபவமும், வெற்றியும், நல்லொழுக்கத்தைக் கட்டியெழுப்ப விரும்புவோர் தங்கள் வலிமை மற்றும் உறுதிப்பாட்டிற்காக தேவனுடைய அன்பின் அடைக்கலத்திற்குத் திரும்ப வேண்டும் என்பதை அனைவருக்கும் நினைவூட்டுகிறது.

நற்குணம் ஒரே இரவில் கட்டமைக்கப் படுவதில்லை என்பதை லேயாளின் உதாரணம் நமக்கு கற்பிக்கிறது. நல்மேய்ப்பனின் குரலைப் பின்பற்றி, அது நம்மை எங்கு வழிநடத்தினாலும், அதில் நாம் நடந்து, உலகின் மதிப்புகளை எதிர்த்து, தேவனுக்கு அடிபணிவதன் மூலம் உலக பிரச்சனைகளைக் குறைக்கலாம் என்பதை லேயாளின் அனுபவம் நமக்குக் கற்பிக்கிறது. தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் மலை உச்சியை நோக்கி தாழ்மையுடன் பணிந்து, அவருடைய அன்பின் பாதுகாப்பில் நாம் பலியின் இடுக்கமான பாதையில் நடக்கும்போது, மரியாள் மற்றும் லேயாளின் முன்மாதிரிகளால் நாம் பெலன் பெறலாம்.

## நற்குணம், உண்மையன வல்லமையின் ஆதாரம்

மரியாள் மற்றும் லேயாளின் வாழ்க்கை, நம் வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்திற்கு அடிபணிவதற்கு கற்றுக்கொடுக்கிறது. தேவன் மீதான அவர்களின் அர்ப்பணிப்பு அவர்களின் குணங்களை வடிவமைத்தது. மேலும் ஒவ்வொரு கேள்வி அல்லது ஏமாற்றத்தின் போதும் அவர்களின் உறுதியை பலப்படுத்தியது. மரியாளின் அனுபவத்தில், நற்குணம் அவளுடைய குணாதிசயத்தின் அடிப்படையை உருவாக்கியது, மேலும், தேவனுடைய பார்வையில் அவளது கருணையும் தயவும் அவளது உறுதியை பலப்படுத்தியது. இது கடினமான முடிவுகளில் அவளை வழிநடத்தும் என்று அவள் நம்பியிருந்தாள். லேயாளின் அனுபவத்தில், அவளது மனித இயல்பின் கரடுமுரடான விளிம்புகள் தேவனுடைய விருப்பத்திற்கு வழி வகுக்கும் வரை அவளது அன்றாடப் போராட்டம் அவளை பக்குவப்படுத்தி, அவளது குணத்தின் விளிம்பை வடிவமைத்தது.

நாம் மறுரூபமாக்கும் வரை தேவனுடைய நீதி நம் குணத்தை ஊடுருவ அனுமதிப்பதே நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். இதன் விளைவாக உருவாகும் ஆவிக்குரிய குணம், நமது சொந்த பரிசுத்தமாகுதலின் போது தேவனுடைய வார்த்தையின் வலிமையையும் நெகிழ்ச்சியையும் மெதுவாகவும் சீராகவும் மாற்றும். தேவனுடைய சித்தத்திற்கு நாம் அடிபணிவதும், அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவதுமே நம்முடைய குறிக்கோளாக இருக்கவேண்டும். இந்த ஆவிக்குரிய குணம் நம்முடைய புதிய அடையாளமாக மாறும்.

ஒரு தெய்வீக வாழ்வின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை, தேவனுடைய வார்த்தையை கவனமாக ஆய்வு செய்து பயன்படுத்த வேண்டும் என்பதை நற்குணத்திற்கு (தார்மீக மேன்மையுடன் கூடிய நற்குணநலன்கள்) தேவைப்படும். இது தேவனுடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிவதற்கு வழிவகுக்கும், மேலும் அது நம்முடைய சொந்த தீர்மானத்தை பலப்படுத்தும். தேவன் தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் வாக்களிக்கின்ற பலத்தையும் வல்லமையையும் நாம் எவ்வாறு பெறலாம் என்பதை மரியாளும் லேயாளும் காட்டினார்கள். (நீதிமொழிகள் 10:29, 2 தீமோத்தேயு 1:7)

# அறிவு மற்றும் தேவனுடைய பெண்கள் அறிவுப் பெற்ற தேவனுடைய ஊழியர்கள்



*Ernie Kuenzli*

"கர்த்தர் ஞானத்தைத் தருகிறார், அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதிமொழிகள் *2:6*)

**ச**பை வளர்க்கவேண்டிய குணநலன்களைப் பட்டியலிட்ட போது, பேதுரு அறிவை மூன்றாவதாகக் குறிப்பிட்டார். "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்... இச்சையடக்கத்தையும்.... பொறுமையையும்..... தேவபக்தியையும்... சகோர சிநேகத்தையும்... அன்பையும் .... " (2பேதுரு1:5-7) கிறிஸ்து குணநலன்களையும், தேவனுக்குச் சேவை செய்ய விரும்புவோரின் கீழ்ப்படி தலையும் வளர்த்துக்கொள்ள, தேவனைப் பற்றிய அறிவு ஒரு முன்நிபந்தனை என்பதை இந்தப் பட்டியல் வெளிப்படுத்துகிறது. "என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப் பண்ணும் பொருட்டு,..... அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்." (நீதிமொழிகள் 2:1, 2,5)

தேவனைப் பற்றிய அறிவும், குறிப்பாக, அந்த அறிவைப் பயன்படுத்தி, தேவனுக்கு பிரியமாக இருப்பதற்கு அவருக்கும் கீழ்ப்படிந்ததே, வேதத்தில் பல விசுவாசமுள்ள ஸ்திரீகளின் முக்கிய அடையாளமாக இருந்தது. அவைகள் வேதப் பதிவில் குறிப்பிடப்படாவிட்டாலும், தேவனைப் பற்றிய அறிவு ஒவ்வொரு விசுவாசமுள்ள ஸ்திரீக்கும் பின்னால் இருந்தது.

**ஏவாள்**

ஏவாள் தேவனிடமிருந்து பெற்ற அறிவைப் பயன்படுத்தத் தவறியது, அவள் கீழ்ப்படியாமை மற்றும் பாவத்தில் விழுந்ததில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது. ஏதேன் தோட்டத்தில் இருந்தபோது, தேவன் ஆதாமுக்கு ஒரு எளிய சட்டத்தைக் கொடுத்தார். "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். " (ஆதியாகமம் 2:16-17) சட்டம் பின்பற்ற எளிதானதாக இருந்தாலும், கீழ்ப்படியா விட்டால் கடுமையான விளைவுகளை அது உறுதியளித்தது.

இந்த சட்டம் ஏவாளுக்கு எப்படித் தெரிவிக்கப்பட்டது என்ற நமக்கு சொல்லப்



Mother Eve, with a choice

படவில்லை. இன்னும் சர்ப்பம் அவனை விசாரித்த போது அவள் அந்த தகவலை பெற்றிருந்தாள். "ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து - நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம், ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் - நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். " (ஆதியாகமம் 3:2-3) அதற்கு ".. சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி - நீங்கள் சாகவே சாவதில்லை." (ஆதியாகமம் 3:4) என்று முரண்பட்ட தகவலுடன் சர்ப்பம் பதிலளித்தது. ஏவாள் ஒரு பொய்யை அதாவது தவறான ஒரு தகவலை எதிர்கொண்டது இதுவே முதல் முறை. (யோவான் 8:44)

இப்போது ஏவாளுக்கு இரண்டு முரண்பட்ட தகவல்களைப் பெற்றிருந்தாள். இரண்டுமே உண்மையாக இருக்க முடியாது. அவள் எப்படி பதில் அளித்தாள் ? சர்ப்பத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் துல்லியமான விபரத்தை சரிபார்க்க அவள் ஆதாமிடம் சென்றாளா ? இல்லை! அந்த தகவலை சரிபார்க்க அவள் பரலோக பிதாவிடம் சென்றாளா ? இல்லை !மாறாக, முரண்பட்ட அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்க அவள் தனது சொந்த தீர்ப்பைப் பயன்படுத்தினாள். தேவனுடைய கட்டளைகளில் உள்ள நன்மைகளை விட சர்ப்பத்தின் பொய்யில் உன்ன நன்மைகள் சிறந்ததாகத் அவளுக்கு தோன்றியபோது, அவள் சர்ப்பத்தை நம்ப விரும்பினாள். இது சந்தேகத்திற்கு இடமின்றி அவள் வாழ்நாள் முழுவதும் வருந்தக்கூடிய ஒரு தேர்வாக இருந்தது. தேவனால் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட அறிவைப் பின்பற்றாததன் விளைவுகளை ஏவாளின் உதாரணம் காட்டுகிறது.

தேவனைப் பற்றிய அறிவை நம்



*Rhab, hiding the spies*

வாழ்க்கையின் பயன்படுத்துவதை நிறுத்தும்போது, தேவனுடனான நமது உறவையும் அந்த உறவின் ஆசீர்வாதங்களையும் பணயம் வைக்கிறோம். தேவன் தம்முடைய அறிவை நமக்கு வெளிப்படுத்துகிறார், எனவே அதை நம் வாழ்வில் பயன்படுத்துவதன் மூலம் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். "அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார், உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார். அவர் நியாயத்தின் நெறிகளைத் தற்காத்து தம்முடைய பரிசுத்தவான்களின் பாதையைக் காப்பாற்றுகிறார்." (நீதிமொழிகள் 2:7-8)

**ராகாப்**

ராகாப் ஏவாளை விட தேவனைப் பற்றிய அறிவில் குறைவாக இருந்தபோதிலும், அவள் பெற்றிருந்த குறைவான அறிவுக்கு இசைவாக செயல்பட்டாள். எரிகோவில் வசிப்பராக இருந்த ராகாப், தேவன் எரிகோவை இஸ்ரயேலர்களின் கைகளில் ஒப்படைக்கப் போகிறார் என்பதை உணர்ந்தாள். அவள் வேவுக்காரர்களை நோக்கி - "கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தாரென்றும், உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக்குறித்து

தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்துபோனார்கள் என்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து..... சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினதையும்..... சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும்.....எங்கள் இருதயம் கரைந்து போயிற்று... உங்கள் தேவனாகிய காத்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர். "(யோசுவா 2:9-11)

இஸ்ரயேலின் தேவனுடைய மேன்மையை உணர்ந்த ராகாப், வேவுக்காரர்களை மறைத்து, இருட்டிற்குப் பிறகு எரிகோவிலிருந்து தப்பிக்க உதவி செய்தாள். மேலும் தனது ஜன்னலில் ஒரு "சிவப்பு நூல் கயிறு" தோங்கவிடுவதன் மூலம் தேவன் மீது தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினாள். (யோசுவா2:19) இதன் விளைவாக, "...ராகாப் என்னும் வேசி மறைத்துவைத்தபடியினால், அவளையும் அவள் தகப்பன் வீட்டாரையும் அவளுக்குள்ள யாவையும் யோசுவா உயிரோடே வைத்தான்.." (யோசுவா 6:25) "அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப் பட்டாள் ? "(யாக்கோபு 2:25) என்று யாக்கோபு எழுதினார். ராகாப் பெற்ற தேவனுடைய அறிவுக்கு அவள் கீழ்ப்படிந்ததினால் அவளுடைய உயிரை காப்பாற்றுவதோடு, ஈசாயின் குமாரனான தாவீது இராஜாவையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் கொண்டுவரும் வம்சத்தில் ஒரு பகுதியாக மாறவும் அது வழிவகுத்தது. (மத்தேயு1:5, லூக்கா 3:23,31,32)

**மார்த்தாள் மற்றும் மரியாள்**



*Priscilla and Aquila, Paul's Companions*

புதிய ஏற்பாட்டில், மார்த்தாள் மற்றும் மரியாள், தேவனைப் பற்றிய அறிவின் மீது பேராவல் கொண்டு அதனால் லாபம் அடைந்த ஸ்திரீகளின் எடுத்துக்காட்டுகள். மார்த்தாள் இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்ததை நாம் லூக்கா 10:38-41ல் காண்கிறோம். இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் மார்த்தாள் விருந்தோமபல் செய்து கொண்டிருக்கையில், "அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள், அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்." (வசனம் 39) "மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து - ஆண்டவரே, நான் தனியே லேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உனக்குக் கவலை யில்லையா ? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்"(வசனம் 40) இயேசுவுக்கு விருந்தளிப்பது தொடர்பான வேலையை மரியாள பகிர்ந்து கொள்ளவில்லை, மார்த்தாள் அதைக் குறித்து வருத்தப்பட்டார்.

"மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக்

கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் ..."(41-42)என்று இயேசு அதற்கு பதில் அளித்தார். விருந்தோம்பல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தபோதிலும், தம்முடைய வார்த்தைகளைக் கேட்போர் கேட்கவும், அவற்றை இருதயத்தில் எடுத்துக்கொள்ளவும் இயேசு விரும்பினார். இயேசுவின் அறிவுரை மார்த்தாள் கடைப்பிடித்தாள் என்று பிறகு வாசிக்கிறோம்.

அடுத்த முறை மார்த்தாளையும் மரியாளையும் சந்தித்தபோது, அவர்களுடைய சகோதரர் லாசரு இறந்துவிட்டார். லாசரு வியாதிப்பட்டிருப்பதாக அந்த சகோதரிகள் இயேசுவுக்குச் செய்தி அனுப்பினார்கள். ஆனால் இயேசு அவரை குணப்படுத்த சரியான நேரத்தில் திரும்ப தவறிவிட்டார்.லாசரு இறந்து நான்கு நாட்களுக்குப் பிறகு இயேசு வந்தார். சகோதரிகளோ மனமுந்து போனார்கள். "ஆண்டவரே, நீர் இங்கே யிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவ தெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவார் என்று அறிந்திருக்கிறேன் ..." (யோவான் 11:21-22) என்று மார்த்தாள் கூறினாள். லாசருவைக் காப்பாற்ற இயேசு சீக்கிரமாக வராததால் அவர்கள் நம்பமுடியாத அளவிற்கு ஏமாற்றமடைந்தனர் . இயேசு கவலைப்படவில்லையா ? ஆனாலும் "இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவார் என்று அறிந்திருக்கிறேன் " என்று மார்த்தாள் மிகவும் சுவாரஸ்யமான வார்த்தைகளோடு முடிக்கிறாள். தன் சகோதரனை மீண்டும் உயிர்ப்பிக்கும்படி அவள் இயேசுவிடம் கேட்டாளா ? "

இயேசு அவளை நோக்கி - உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் .." (வசனம் 23)என்று இயேசு பதில் அளித்தார். மரியாளைப் போலவே இயேசுவின் போதனைகளைக் மார்த்தாளும் கேட்டுக் கொண்டிருந்தாள் என்பது வெளிப்பட்டது. "அதற்கு மார்த்தாள் - உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். " (வசனம் 24) மார்த்தாள் இயேசுவின் அறிவுரையை மனதில் கொண்டிருந்தாள். இயேசு கூறியிருக்க வேண்டிய ஒன்றை மீண்டும் அவள் மேற்கோள் காட்டினாள்.

இயேசு இதை ஒப்புக்கொண்டு, பின்னர் உயிர்த்தெழுதல் மற்றும் கடைசி நாள், இரண்டிலும் தன்னை இணைத்துக் கொண்டார். "இயேசு அவளை நோக்கி - நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயி ருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவ னெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். இதை விசுவாசிக்கிறாயா என்றார். "(வசனம் 25-26) இதற்கு மார்த்தாள், இயேசு தன் சகோதரனை கல்லறையிலிருந்து எழுப்புவதற்கு முன்பே, இயேசுவைப் பற்றிய தனது அறிவையும் அவருடைய போதனை களையும் அடிப்படையாகக் கொண்டு அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை வெளிப் படுத்தினாள். "அதற்கு அவள் - ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவ குமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்." (வசனம் 27)

இயேசுவே கிறிஸ்து என்ற விசுவாசம் வலுவாக இருந்தபோதிலும், அடுத்து நடக்கபோகிற காரியத்திற்கு அவள் தயாராக வில்லை. அவர்கள் லாசருவின் கல்லறையை அடைந்தபோது, "கல்லை எடுத்துப் போடுங்கள் என்று.." இயேசு கூறினார். (வசனம் 39) மார்த்தாளோ, "ஆண்டவரே, இப்பொழுது

தாறுமே, நாலுநாளாயிற்றே ..." என்று பதில் அளித்தாள். (வசனம் 39) "இயேசு அவளை நோக்கி - நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்" (வசனம் 40)

கல் அகற்றப்பட்டபின், இயேசு தம்முடைய பரலோகத் தந்தையுடன் பொதுவாக உரையாடினார். "அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்து கல்லை எடுத்துப்போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து - பிதாவே நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன், ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும் படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்." (வசனம் 41-42) தேவனுக்கு நன்றி தெரிவிக்கும் இயேசுவின் வார்த்தைகள் கடந்த காலத்தில் உள்ளது. அதாவது தேவன் ஏற்கனவே லாசருவை உயிர்ப்பித்து விட்டார் என்று கூறுகிறது. "இவைகளைச் சொன்னபின்பு, லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய் இயேசு கூப்பிட்டார். இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்யும் தேவனுடைய வல்லமை மார்த்தாள், மரியாள் மற்றும் அவர்களது நண்பர்களுக்கு பலமாக நிரூபிக்கப்பட்டது. (வசனம் 43,44) இயேசுவைப் பற்றிய அவர்களின் அறிவு, அவருடைய போதனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் பெறப்பட்டது, இயேசுவை மேசியாவாக அங்கீகரிக்க வழிவகுத்தது, அதை அவர் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். அவர்களுடைய அறிவு இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவும், சந்தேகத்திற்கு இடமின்றி கிறிஸ்தவ வழியில் நுழையவும் வழிவகுத்தது.

**பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கிலா**

தேவனை பின்பற்றின மற்றொரு ஸ்திரீ பிரிஸ்கிலாள். இவள் தனது அறிவுக்காக அறியப்பட்டவள். மற்ற யூதர்களுடன் ரோமிலிருந்து வெளியேற்றப்பட்ட பின், கொரிந்துவில் அப்போஸ்தலனாகிய பவுலைச் சந்திக்கும் போது அவளும் அவளுடைய கணவர் அகிலாவும் அப்போஸ்தலர் 18 ஆம் அதிகாரத்தில் நமக்கு அறிமுகப் படுத்தப்படுகிறார்கள். ஒரே தொழில் செய்தபடியால் கொரிந்துவில் இருந்தபோது பவுல் அவர்களுடன் தங்கினார் - கூடாரம் போடுதல். (அப்போஸ்தலர் 18:2-3, 18-19)

அந்தத் தம்பதிகள் அப்போஸ்தலருடன் சேர்ந்து, அவருடன் எபேசுவுக்குப் பயணமானார்கள், பவுல் பயணம் செய்தபோது அவர்கள் அவரோடு தங்கியிருந்தார்கள். அந்த நேரத்தில், "அப்பொழுது அலெக்கந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்போல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்த வனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப்

போதகம் பண்ணிக்கொண்டுவந்தான்." (வசனம் 24,25) "அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆககில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக்காண்பித்தார்கள். "(வசனம் 26) இந்த சந்திப்பின் இரண்டு முக்கிய அம்சங்களைக் கவனியுங்கள். முதலாவதாக, பிரிஸ்கில்லாள் முதலில் குறிப்பிடப்படுகிறாள். இந்த ஊழியத்தில் அவள் முன்னிணியில் இருந்தாள் என்பதைக் காட்டுகிறது. யூத சட்டத்திற்கு எதிராக செய்த பாவங்களுக்காக மனந்திரும்புவதற்காக யோவான் கொடுத்த ஞானஸ்நானம் மற்றும் இயேசுவின் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் எடுப்பதற்கு இடையே உள்ள வித்தியாசத்தை அவள் அறிந்திருந்தாள். இரண்டாவதாக, பிரிஸ்கில்லாளும் அகிலாவும் விவேகமாக, இந்த தகவலை அப்பல்லோவின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். ஜெப ஆலயத்தில் அவரைப் பகிரங்கமாகத் திருத்துவதற்குப் பதிலாக, அவர்கள் அவரைத் தனியே அழைத்துச் சென்று "தேவனுடைய வழியை இன்னும் துல்லியமாக விளக்கினார்கள்." அவர்கள் வேதமாணவர்களாக இருந்தனர், அவர்கள் தங்கள் ஆய்வு மற்றும் புரிதலின் முடிவுகளை மிகவும் பிரபலமான பொதுப் பேச்சாளரிடம் பகிர்ந்து கொண்டனர், அவருடைய புரிதலையும் சுவிசேஷத்திற்கு சாட்சி கொடுக்கும் திறனையும் மேம்படுத்தினர்.

1கொரிந்தியர் **16:19** மற்றும் 2தீமோத்தேயு **4:19** வில் சொல்லும் வாழ்த்துக்களில் அவர்களை மீண்டும் பவுல் குறிப்பிடுகிறார். ரோமர் **16:3,4**இல் பவுலின் மிக விரிவான கருத்துக்கள் காணப்படுகிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள், அவர்களைப்பற்றி நான்மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். "பிரிஸ்கில்லாளும், ஆக்கிலாவும் எப்படி தங்கள் கழுத்தை பணயம் வைத்தனர் என்று நமக்கு சொல்லப்படவில்லை, ஆனால் பவுலும் எல்லா புறஜாதி கிறிஸ்தவர்களும் மிகவும் பாராட்டினார்கள். தேவன் பிரிஸ்கில்லாளையும் அகலாவையும் அவர்களுடைய அறிவின் காரணமாகப் பயன்படுத்தினார்.

**முடிவுரை**

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் உள்ள பல விசுவாசமுள்ள பெண்கள் தேவனைப் பற்றிய தங்கள் அறிவின் அடிப்படையில் செயல்பட்டதால், தேவனுக்குக் கீழ்ப்படிதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய கட்டளைகளை நம்பினார்கள். தேவனைப் பற்றிய அதிக அறிவைப் பெற்ற நமக்கு அவர்கள் முன்மாதிரியாக இருக்கிறார்கள். "உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்குப் போதித்தருளும், உம்முடைய கற்பனைகளின் பேரில் விசுவாசமாயிருக்கிறேன்."(சங்கீதம் 119:66)

# தேவனுக்கு அடிபணிதல் சுயகட்டுப்பாடு கொண்ட ஸ்திரீகள்



Matt Kerry

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (2தீமோத்தேயு*1:7*)

சுய கட்டுப்பாடு என்பது ஒரு நல்ல மனதிலிருந்து வரும் சுய ஒழுக்கமாகும். சுய கட்டுப்பாட்டை கடைபிடிப்பது என்பது ஒரு நபர் உணர்ச்சியற்றவர் அல்லது ரோபோட்டிக்காக இருக்கவேண்டும் என்று அர்த்தமல்ல. அவர்கள் தங்கள் சொந்த விருப்பங்களுக்கு அப்பால் தேவனுடைய கட்டுப்பாட்டிற்கு தங்களுடைய வாழ்க்கையை கீழ்படுத்துகிறார்கள் என்று பொருள்.

பயம் சுய கட்டுப்பாட்டிற்கு சவால் விடலாம். அதே நேரத்தில் தெய்வீக சுயக்கட்ப்பாடு, தேவனுடைய சத்தத்தை கேட்க நம்மை நிறுத்தும். பயம் நம்மை சுய கட்டுப்பாட்டை இழக்கச் செய்து, சிந்தனையோ ஜெபமோ இல்லாமல் செயல்படும். கீழே கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களில் வேதாகமத்தில் உள்ள விசுவாசமுள்ள பெண்கள் பயப்படுவதற்கு ஒவ்வொரு இயற்கையான காரணங்களும் இருந்தது. இருப்பினும், சிலர் தெய்வீக சுயக்கட்டுப்பாட்டுன் செயல்பட்டனர், மற்றவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

சுயக்கட்டுப்பாட்டின் உதாரணங்களாக இருக்கும் வேதாகமத்தில் உள்ள விசுவாசமுள்ள ஸ்திரீகள், தேவனுடைய கட்டுபாட்டிற்கு தங்கள் கட்டுப்பாட்டை வழங்கினார்கள். அவர்கள் இருதயத்தில் நிச்சயமாக குமிழித்துக் கொண்டிருந்த பயத்தின் ஆவிக்கு அவர்கள் சரணடையவில்லை. அவர்கள் தங்கள் செயல்களை வழிநடத்தவும், எல்லாவற்றையும் நிர்வகிக்கவும் தேவனுடைய வார்த்தையை நம்பியிருந்தனர்.

**ஏவாள் (ஆதியாகமம் 3-4)**

"பின்பு தேவனாகிய கர்த்தர் - மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்." (ஆதியாகமம் 2:18) புருஷரும் ஸ்திரீகளும் ஒரு கூட்டாக இருப்பதே துவக்கத்திலிருந்து தேவனுடைய திட்டமாக இருந்தது. இன்றைய உலகில், "உதவி" என்பது ஒரு தாழ்வு நிலையாக கருதப்படுகிறது. இருப்பினும், ஊழிய நிலைகளை தேவன் மிக முக்கியமானதாகக் கருதுகிறார். (மத்தேயு 20:20-28) ஆதாம் மற்றும் ஏவாள் ஒன்றாக வேலை செய்யவும், ஒருவரையொருவர் ஆதரிக்கவும், தேவனோடு உரையாடவும், ஒருவருக்கொருவர் துணையாக இருக்கவும் தேவன் அனுமதித்தார்.

சாத்தானின் சோதனையை எதிர்கொண்ட போது ஏவாள் தன்னை நம்பி தன் முதல் தவறைச் செய்தாள். அவளுடைய கேள்வியை அவள் பரலோகத் தகப்பனிடமும் சிருஷ்டிகரிடமும் உடனே எடுத்துச்




*Abigail, whose humble intervention prevented hostility*

சென்றிருக்க வேண்டும். கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று நாம் விரும்பினாலும், நாம் "தன்னம்பிக்கையின்" மேல் சார்ந்துவிடுகிறோம்.

ஏவாளின் அடுத்த தவறு, இந்த விஷயத்தை ஜெபத்தில் ஏறெடுக்காமல் அல்லது தன்னுடைய தெய்வீக நண்பனாகிய துணைவருடனும் விவாதிக்காமல், அவள் கையில் எடுத்துகொண்டாள். சாத்தானின் பொய்யால் ஏவாள் அவனால் கைப்பற்றப்பட்டாள். தேவன் அவர்களிடமிருந்து ஏதோ சில நலமானவைகளை மறைத்து வைத்திருக்கிறார் என்று சாத்தான் அவளை நம்ப வைத்தான். தேவன் அவர்களின் சிறந்த நலன்களை இருதயத்தில் கொண்டிருக்கவில்லை என்ற விதையை சாத்தான் அவளுக்குள் விதைத்தான். தவறிவிடுவோமோ என்ற பயம், முதலில் ஏவாளின் மனதைக் கட்டுப்படுத்தியது, பின்னர் அவளுடைய செயல்களைக் கட்டுப்படுத்தியது. நம் மனதில் பயம் வளர அனுமதிக்கப்படும் போது, விஷயங்களை நம் கைகளில் எடுத்துக்கொள்வதற்கு நாம் தூண்டப்படலாம். நல்ல மனப்பான்மையின் அடிப்படையில் உள்ள சுயக்கட்டுப்பாடோடு, பின்னர் தன்னம்பிக்கையால் மாற்றப்படுகிறது. ஆனால் தேவன் அன்பாக இருக்கிறார் என்பதில் நம் மனதை நிலைநிறுத்தும்போது, அவரது பரிபூரண அன்பு நம் இருதயத்தில் உள்ள எந்த பயத்தையும் எறிந்துவிடும், அது நம் தன்னம்பிக்கையை புறம்பாக்கும். கிறிஸ்து மூலம் தேவன் மீது நாம் சார்ந்திருப்பது நம் அச்சங்களைத் தணித்து, தேவனுடைய கட்டுப்பாட்டில் தங்கியிருக்கத் தேவையான சுயக் கட்டுப்பாட்டை வழங்குகிறது. (ரோமர் 8:37)

**அபிகாயேல் (1 சாமுவேல் 25)**

"அந்த மனுஷனுக்கு நாபால் என்றும், அவன் மனைவிக்கு அபிகாயில் என்றும் பெயர், அந்த ஸ்திரீ மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள், அந்தப் பூருஷனோ முரடனும் துராகிருதனுமாயிருந்தான், அவன் காலேபுடைய சந்ததியான். "(1 சாமுயேல் 25:3)



*Sarah, with her child of promise*

அபிகாயிலின் சரித்திரத்தில், ஒரு பெண் வெளிப்புறமாக அழகாக விவரிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், பகுத்தறிவு, புத்திசாலி மற்றும் உணர்திறன் கொண்டவளாகவும் இருப்பதைக் காண்கிறோம். இந்த கூடுதலான குணங்கள் சுய கட்டுப்பாடு கொண்ட ஒரு நபரிடம் காணப்படுகின்றது. தாவீதுடன் அபிகாயேல் சந்தித்த கதையில், அவள் சுயக்கட்டுப்பாட்டின் முதன்மையான உதாரணமாக இருக்கிறாள். தீவிரமான பிரச்சனையின் போது, அவளது புத்திசாலித்தனமான, பகுத்தறியும் குணம் அவளது கணவன் நாபாலின் மந்தமான மற்றும் தீய செயல்களுக்கு, தாவீதின் உக்கரமான எதிர்வினைகளை மாற்றியது.

தாவீதும் அவருடைய ஆட்களும் அபிகாயிலின் கணவரான நாபாலுக்குச் சொந்தமான இடத்தில் இருந்தார்கள். அங்கே இருந்தபோது, அவர்கள் நாபாலின் மேய்ப்பர்களையும் மந்தைகளையும் பெலிஸ்தரின் தாக்குதல் களிலிருந்து பாதுகாத்தனர். தாவீது நாபாலுக்கு அன்பான வார்த்தையை அனுப்பி, அவருடைய ஆட்களுக்கு விருந்தோம்பல் செய்யும் ஒரு எளிய உதவியை அவரிடம் கேட்டார். அது அக்காலத்தில் ஒரு வழக்கமாகவும் இருந்தது. அதற்கு நாபால்



*Ruth, gleaning in the feld*

கடுமையாகவும் முட்டாள்தனமாகவும் பதில் அளித்தார். மேலும் அவமதிக்கக்கூடிய மற்றும் நிராகரிக்கும் பதிலை அவன் தாவீதுக்கு அனுப்பினான். தாவீதின் ஆட்கள் இந்த பதிலை அவரிடம் அறிவித்தபின், அவர் கோபத்தால் சுயக்கட்டுப்பாட்டை இழந்தவராக எழுந்து சென்றார். வாள் எடுத்துகொண்டு நாபாலின் வீட்டிற்கு தன்னைப் பின்தொடரும்படி தாவீது 400 பேரை அழைத்தார். (1சாமுயேல்25:13)

தாவீதின் திட்டம் அபிகாயிலிடம் அறிவிக்கப்பட்டது. அவள் சுயக்கட்டுப்பாட்டின் வெற்றியின் தருணமாக அது இருந்தது. அப்போதுதான் அபிகாயிலுக்கு எல்லா உண்மையும் தெரிந்தது, அவளது இயல்பான பயம் மற்றும் அச்ச உணர்வுகளை விட அந்த உண்மை அவளுக்குள் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தாவீதுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் உணவு பதார்த்தங்களை அவளுடைய வேலையாட்கள் மூலமாக அனுப்பிவிட்டு, அவள் அவர்களுக்கு பின் சென்றாள். (1சாமுயேல் 25:18-20)

தொடர்ந்து வரும் வசனங்களில், இஸ்ரயேலின் தேவன் மேலுள்ள அபிகாயிலின் விசுவாசம், தாவீதுக்கும் அவருடைய ஆட்களுக்கும் உணவைப் பரிசாக அளித்தது. தாவீதிடம் அவள் சொன்ன வார்த்தைகள் பழிவாங்குவதற்னாக அவரது உடனடி உணர்வுகளைத் தணித்தது, மேலும் தொடர்ந்து வரும் வசனங்களில், தாவீது அபிகாயிலின் அமைதியான ஞானத்தற்காக அவளைப்பாராட்டினார்.

கடந்த காலத்தில் அவள் தேவன் மேல கொண்டிருந்த விசுவாசம், இந்த கொந்தளிப்பின் மத்தியிலும் தோல்வியடையாது என்று அபிகாயேல் நம்பினாள். தேவனுடைய உறுதியான வாக்குத்தத்தங்களில் மேல் முதலில் நம்பிக்கை வைக்க முயற்சி செய்யும் ஆண்டவருடைய சீஷர்களுக்கு இதுவே உண்மை. வாழ்க்கையின் கடுமையான புயல்கள் நம்மை நொடியில் உலுக்கி, நம் வாழ்க்கை கொந்தளிப்பில் இருப்பதைப் போல உணரவைக்கலாம், ஆனால் நம்முடைய விசுவாசம் கிறிஸ்து இயேசுவின் மூலம் நம்முடைய பரலோகத் தகப்பனாகிய திடமான கற்பாறையில் நம்மை நங்கூரமிட வைக்கிறது. (எபிரெயர் 6:19)

**ஆபிரகாமின் மனைவி, சாராள் (சாராய்) (ஆதியாகமம் 16-17)**

நம் வாழ்வில் ஏமாற்றம் வரும்போது சுயக்கட்டுப்பாடு என்னவாகும் ? சுயக்கட்டுப்பாடு நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய நேரம் இதுவே. ஆபிராமின் மனைவி சாராய், பல

தசாப்தங்களாக பிள்ளைப் பெறாத விரக்தி மற்றும் ஏமாற்றத்தின் உணர்வுகளைப் பெற்றிருந்தாள். அவர்களுடைய சந்ததியினர் ஒரு பெரிய தேசமாகி, பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார்கள் என்று தேவன் தனது கணவருக்கு அளித்த நிபந்தனையற்ற வாக்குறுதியை அவள் அறிந்திருந்தாள். ஆனாலும் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் வருடங்கள் கடந்துவிட்டதாக அவள் நம்பினாள். (ஆதியாகமம் 15:4-6)

சாராய் தன் விரக்தியினால் காரியங்களைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டு, அந்தச் சந்ததியை பெற்றெடுப்பதற்கு ஆபிராமுக்குத் தன் வேலைக்காரியான ஆகாரை கொடுத்ததை காண்கிறோம்.

துரதிர்ஷ்டவசமாக, இந்தத் திட்டத்தைத் தொடரும் முன் சாராய் அல்லது ஆபிராம் தேவனுடைய வழிகாட்டுதலைக் கேட்டதாக எந்தக் பதிவுகளும் இல்லை. சோகம் மற்றும் விரக்தியின் உணர்வுகளை நம் மனதில் நிலைநிறுத்தும்போது, விஷயங்களை நாம் கைகளில் எடுத்துக் கொள்ள வழிவகுக்கும். இந்த தருணங்களில், சுய கட்டுப்பாடுக்கான நமது முயற்சிகள் உண்மையில் நம் மீது மட்டுமே கவனம் செலுத்துகிறது. ஆகார் கருத்தரித்ததை சாராய் பார்த்தபோது, அவளை வெறுக்க ஆரம்பித்தாள். சாராயின் கோபமும் காயப்படுத்துதலும் மீண்டும் ஒருமுறை ஆக்கிரமித்தது. சூழ்நிலையினால் அவளுடைய விரக்தி ஆபிராம் மற்றும் ஆகார் மீதான கோபத்தில் வெளிப்பட்டது. சாராயின் கோபத்தின் வின்விளைவுகளுக்கு பயப்படுவதற்கும், தன் எஜமானிக்குக் கீழ்ப்படிவதற்கும் போராடுவதற்கும் நடுவில் ஆகார் சிக்கிக்கொண்டாள். நம்முடைய மூளையை எதிர்மறையான உணர்ச்சிகளுக்கு இசைவாக போராட அனுமதிக்கும்போது, சுய கட்டுப்பாடு இழக்கப்படுகிறது, மேலும் நம்மையும் நம் அன்புக்குரியவர்களையும் காயப்படுத்திவிடுவோம்.

சாராய் தனது கடந்த கால அனுபவங்களில் அவள் கொண்டிருந்த விசுவாசத்தை எண்ணி, இந்த காலத்திற்கு தேவையான விசுவாசத்தைப் பெற சாராய் பரலோக பிதாவை சார்ந்திருக்கவேண்டும். இதற்கு முன் பல முறை ஆண்டவரின் விடுதலையை அவள் அனுபவித்தாள். தேவன் சாராய், ஆபிராம் மற்றும் அவர்களது குடும்பத்தை பஞ்சத்திலிருந்து பாதுகாத்தார், எகிப்தில் பார்வோனின் தவறான நோக்கங்களிலிருந்து அவள் மீட்கப்பட்டாள். மேலும் தேவன் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தின் முன்காட்சியை அவர்களுக்குக் காண்பித்தார். அதுபோல, நம்முடைய இயல்பான உணர்வுகள் வேறுவிதமாகச் செயல்பட துண்டினாலும், சுயக்கட்டுப்பாட்டிலும், விசுவாசத்திலும் நம்மை நிலைநிறுத்திக்கொள்வதற்கு, தேவன் நமக்கு பெரிதும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். (2பேதுரு1:4)

## மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் (ரூத்தின் புத்தகம்)

தேவன் நமக்கு கொடுத்த சுயக்கட்டுப்பாடு, விசுவாசத்தால் நிரம்பிய அடிகள் மூலம் தைரியமான காரியங்களைச் செய்ய நம்மை வழிநடத்தும். ரூத்தின் கதையில், சுய ஒழுக்கமுள்ள ஒரு ஸ்திரீயை காண்கிறோம். நிலையாக வளர்ந்து வரும் அவள் விசுவாசம், ஒரே உண்மையான தேவனை அறியும் ஐசுவரியத்தை அடையவதற்கு இட்டுச் சென்றது.

ரூத் ஒரு மோவாபிய ஸ்திரீ, அவள் மக்லோன் என்ற யூத குடியேறிவரின் மனைவி. இஸ்ரயேலில் பஞ்சம் வந்தபோது, குடும்பத்துடன் மோவாப் தேசத்திற்கு ஓடிவந்த எலிமலேக்கின் மகன் மக்லோன்.

அவர்கள் மோவாபில் இருந்தபோது, ரூத் மற்றும் அவளது சகோதிரி ஓர்பாள் மற்றும் அவளுடைய மாமி நகோமி ஆகியோர் விதவைகளாக இருந்தார்கள். இந்த கட்டத்தில், ரூத் தனது மாமி நகோமியுடன் யூதேயாவுக்கு செல்வதா அல்லது மோவாபில் தங்குவதா என்ற தேர்வு செய்ய வாய்ப்பு

பெற்றாள். இந்த நேரத்தில், ரூத் அறியாதவர்களுக்கு பயப்படுவதைக் காட்டிலும் தெய்வீக கட்டுப்பாட்டால் வழிநடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்தாள்.

மோவாபில் ஒரு குடும்பமாக பத்து வருடங்களாக வாழ்ந்த ரூத், தேவனுடனான நகோமியின் உறவு அவளுக்குள் ஒரு தாக்கததை ஏற்படுத்தியது. நகோமி தன் கணவரையும், இரண்டு குமாரர்களையும் இழந்த பிறகும், அவள் தேவன் நேசித்து கனப்படுத்தினாள். "கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால்...." (ரூத் 1:13) என்று அவள் அவர்களுக்கு ஆறுதல் கூறினாள். நகோமியின் விசுவாசம் ரூத்துக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது. நகோமியின் தேவன் தன் தேவனாக இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள். (ரூத் 1:16) நம்மைச் சுற்றியிருப் பவர்களும், நம்மை தேவனுடைய விசுவாசமுள்ள சீஷர்களாக பார்த்து, தேவனைப் பற்றி இன்னும் அறிந்துகொள்ள அவர்களை தூண்டுபடியாக, நம்முடைய வாழ்க்கையும் அப்படியாகவே இருக்கவேண்டும்.

ரூத் நகோமியுடன் யூதாவுக்கு சென்றபோது, நகோமியின் உறவினர் அல்லது ரூத்தின் மீட்பரான போவாஸின் பார்வையில் தயவைக் காண நகோமி ரூத்துக்கு அறிவுரை கூறினாள். சட்டப்பூர்வமாக, எலிமெலேக்கின் பெயரை நிலைநிறுத்த, போவாஸ் தன்னை திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்க ரூத்துக்கு உரிமை இருந்தது. இருப்பினும், ரூத் நகோமியின் ஆலோசனையைப் பெற்று அவளது உரிமைகளைக் கோராமல் தன் சுயக் கட்டுப்பாட்டைப் பயன்படுத்தினாள். நகோமி கூறியது போல், ரூத் பணிவாகவும் நம்பிக்கையுடனும் போவாஸிடம் வந்தாள்.

பல சமயங்களில், நம்முடைய "உரிமைகள்" சவாலிடப்படுவதை உணரும் போது நம் சுய கட்டுப்பாடு நடைமுறை சோதிக்கப்படுகிறது. நாம் எதையாவது இழக்க நேரிடும் என்ற பயம், தேவன் மீதுள்ள நமது இறுதி நம்பிக்கையை விட அதிகமாகிவிடுகிறது. எனவே நமக்கு பாதகமாக முன்னேறிச் செல்கிறோம். புத்திசாலித்தனமான ஆலோசனையைப் பெறவும், புதிய விசுவாசத்தின் பணிவுடன் நடக்கவம் ஆயத்தமாக இருக்கும், சுய ஒழுக்கம் கொண்ட ஒரு ஸ்திரீயின் அழகான உதாரணத்தை ரூத் நமக்குக் காட்டுகிறார். நம்முடைய விசுவாசம் புதிதாக இருந்தாலும் சரி அல்லது பல வருடங்களாக நாம் தேவனோடு நடந்துகொண்டிருந்தாலும் சரி, ரூத்தின் அமைதியான நம்பிக்கை மற்றும் வாழ்க்கையை மாற்றும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் அவளது சுயக்கட்டுப்பாட்டின் உதாரணம் அழகானதும் வல்லமையுமானது.

**முடிவுரை**

அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்தவ ஓட்டத்தில் நம்மை வழிநடத்துவதற் சுயக்கட்டுப்பாடு தேவை என்பதை விவரிக்கும் போது, மாராத்தான் ஓட்டப்பந்தய வீரரின் ஒப்புமையை பயன்படுத்தினார். (1கொரிந்தியர் 9:24-27)

வேதாகமத்தில் உள்ள இந்த விசுவாசமுள்ள ஸ்திரீகள், நம்முடைய பரலோகத் தப்பனைப் பார்க்கவும், தன்னம்பிக்கைக்கு பதிலாக தெய்வீக சுயக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கவும் கற்றுக்கொடுக்கிறார்கள். தெய்வீக கட்டுபாட்டைச் செயல்படுத்துவதற்கு நம்மை தடுக்கக்கூடியவைகளை அறிந்துகொள்ள, சிலரின் மோசமான உதாரணம் கூட பார்க்க உதவியாக இருக்கிறது. "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நம்குதருளி..." (2பேதுரு 1:3)

# உங்கள் பொறுமையில், உங்கள் ஆத்துமாக்களை ஆட்கொள்ளுங்கள் பொறுமையான ஸ்திரீகள்



*Todd Alexander*

"உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை, அவர்கள் வனாந்திரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்." (எபிரெயர் *11:38*) — *Todd Alexander*

**தே**வனுடைய ஒவ்வொரு ஸ்திரீயின் இருதயத்திலும் ஒரு பாடல் உள்ளது. இது நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் பாடலாகும். அவள் தேவைத் தேடும்போது, அவளுடைய பாடல் அவளை அறிவு, புரிதல் மற்றும் பகுத்தறிவுக்கு வழிகாட்டுகிறது. அவள் மற்றவர்களை விட வித்தியாசமாக நடக்கிறாள் அவளுடைய உதாரணத்தில், அவள் ஒரு ஒளி விளக்காக இருக்கிறாள்.

தேவன் மீது அவள் கொண்டிருக்கும் நம்பிக்கை அவளுடைய பொறுமையில் வெளிப்படுகிறது. இதையொட்டி, அவளுடைய பொறுமை அவளுடைய குணத்தின் வலிமையையும், உறுதித்தன்மையையும் உருவாக்குகிறது. வேதாகமத்தில் உள்ள இந்த விசுவாசமுள்ள ஸ்திரீகளுக்கு, பொறுமை அவர்களின் கண்ணுக்கு புலப்படாத பலமாக இருந்தது. எல்லாவற்றிற்கும் தேவனை நம்புவதற்கு அவர்கள் முயற்சித்தபோது, அது அவர்களின் சந்தேகங்கள், அச்சங்கள் மற்றும் பாதுகாப்பின்மைக்கு எதிராக அவர்களை பலப்படுத்தியது.

**எஸ்தர் (எஸ்தர் 1-7)**

பொல்லாத ஆமான் சதிசெய்த ஒரு படுகொலையிலிருந்து மிகுந்த பொறுமையுடன் எஸ்தர் ராஜாத்தி தன் ஜனங்களைக் காப்பாற்றினாள். ஒரு வேலை தேவன் தம்முடைய ஜனங்களை காப்பாற்றுவதற்காக எஸ்தரை இராணியாக நிலைநிறுத்தியிருக்கலாம் என்று எஸ்தர் ராஜாத்தியின் சிறிய தகப்பனாகிய மொர்தெகாய் அவளுக்கு புத்திசாலித்தனமான ஆலோசனையை வழங்கினார். மிக சிறிய வயதில், அவளுடைய சூழ்நிலைமையின் ஈர்ப்பு மற்றும் அவளுக்கு முன்னால் இருக்கும் பொறுப்பின் அளவை கற்பனை செய்வது மிகவும் கடினம். அத்தகைய வல்லமைவாய்ந்த எதிராளிக்கு விரோதமாக அவள் எப்படி வெற்றிபெற முடியும்?

இராஜாவின் அழைப்பின்றி அவர் முன் நிற்பதற்கு எஸ்தர் முதலில் தன் உயிரைப் பணயம் வைத்தாள். அதிர்ஷ்டவசமாக, அவளுடைய தோற்றம் அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது, மேலும் அவர் அவளிடம் என்ன வேண்டும் என்று கேட்டார். அவர் தனது இராஜ்யத்தின் பாதியை அவளுக்கு வழங்க தயாராக இருந்தார். உடனே அவள் தன் முழு வழக்கையும் இராஜாவுக்கு முன் எடுத்துரைத்



*Esther and Mordecai*

திருக்கலாம். ஆனால் எஸ்தர் பொறுமையா காத்திருந்தாள்.

இராஜாவையும் ஆமானையும் ஒரு ஆடம்பரமான விருந்துக்கு அழைக்க வந்ததாக அவருக்கு பதில் அளித்தாள். மொர்தெகாயின் ஜெபமும் உபவாசத்தின் ஆதரவையும் அவள் நிச்சயமாக உணர்ந்திருப்பாள், மேலும் மொர்தெகாயின் விசுவாசம், நம்பிக்கை மற்றும் தேவன் மேலுள்ள நம்பிக்கை ஆகியவற்றின் முன்மாதிரியைப் பின்பற்ற அவள் பலப்படுத்தப் பட்டிருக்கலாம். இருப்பினும், எந்தவொரு வெளிப்புற பார்யைாளருக்கும், எஸ்தர் பொறுமையோடு தேவனுக்காக காத்திருப்பத விசித்திரமாகத் தோன்றலாம், ஏனெனில் அவளுடைய ஜனங்களை கொல்லும் ஆமானுடைய திட்டங்கள் தாமதமின்றி முன்னேறிக் கொண்டிருந்து. ஆயினும்கூட, எஸ்தர் தனது ஜனங்களை காப்பாற்ற சரியான வாய்ப்பை உருவாக்க தேவனுக்காக காத்திருந்தாள். தேவன் அகாஸ்வேரு இராஜாவுக்கு தூக்கமில்லாத இரவை ஏற்படுத்தி, எஸ்தரின் பொறுமையான விசுவாசத்திற்கு வெகுமதி அளித்தார்.

அதன் பிறகு, தேவன் அவருடைய இராஜ்யத்தில் சமீபத்திய நிகழ்வுகளின் பதிவைத் திறந்து வாசிக்கவேண்டும் என்ற விருப்பத்தை இராஜாவின் இருதயத்தை துாண்டினார். அகாஸ்வேருவின் வாழ்க்கைக்கு எதிரான ஒரு சதியை மொர்தெகாய் வெளிப்படுத்திய ஒரு பதிவை வாசித்தார். அந்த சம்பவத்தை நினைவு கூர்ந்த பிறகு, இராஜா மொர்தெகாயை கௌரவிக்க விரும்பினார். இராஜாவுக்கு முன்பாக மொர்தெகாய் மீது குற்றம் சாட்ட ஆமான் திட்டமிடுவதற்கு ஒரு நாள் முன்பு இது நடந்தது. இந்த அற்புதமான நேரம் எஸ்தரின் விசுவாசத்தை தொடர்ந்து வந்த உறுதியையும் சந்தேகத்திற்கு இடமின்றி பலப்படுத்தியது.

எஸ்தர் பொறுமையாக காத்திருப்பதன் மூலம்,



*Anna the Prophetess*

குறிப்பிடததக்க ஆதரவு, அவள் சார்பாக மாறியதை கண்டாள். மொர்தேகாய்க்கு கட்டிய தூக்கு மேடையிலேயே ஆமான் கொல்லப்பட்டபோது மொர்தேகாய் கௌரவிக்கப்பட்டார். இதன் விளைவாக, எஸ்தரின் ஜனங்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

இறுதியில், எஸ்தரின் யுக்தி வேலை செய்தது. இராஜாத்தியாகிய எஸ்தர் ஆமானின் பொல்லாத சதியின் உண்மையை அகாஸ்வேரு இராஜாவுக்கு தேவன் வெளிப்படுத்தும் வரை பொறுமையாக காத்திருந்தாள். அவள் பொறுமையாக தேவனுடைய சித்தத்தை சார்ந்து, நீதியான கொள்கைகளை கடைபிடிப்பதன் மூலம், இராஜாவுக்கு முன்பாக இளவயதில் அனுபவமற்ற நிலையில் நின்றபோதிலும், தன் ஜனங்களை காப்பாற்ற தேவனால் பயன்படுத்தப்படுவதை அவள் அனுமதித்தாள்.

### தீர்க்கதரிசியாகிய அன்னாள் (லூக்கா 2:36-38)

நல்ல நோக்கங்கள் நல்ல பலன்கள் தரும் என்பது அவசியமில்லை. ஆனால் சரியான காரணத்திற்காக சரியானதைச் செய்வது தேவனைப் பிரியப்படுத்துவதற்கான சிறந்த செய்முறையாகும். இது அன்னாள் தீர்க்கதரிசியின் விசுவாசமுள்ள

வாழ்க்கையை லூக்காவில் உள்ள வெறும் மூன்று வசனங்களில் விவரிக்கப்படுகிறது. இந்த நிகழ்வுகள் பெரும்பாலும் இயேசுவிடம் அவரது தாயார் மரியாளின் நினைவிலிருந்து சொல்லப்பட்டிருக்கலாம்.

தீர்க்கதரிசியாகிய அன்னாள், ஆலயத்தில் வாழ்வதைத் தேர்ந்தெடுத்தார், உலகத்திற்கு இரட்சிப்பை வழங்கும் மேசியாவுக்காக அவள் பொறுமையுடன் காத்திருந்தாள். இரவும் பகலும் ஜெபத்துடனும், உபவாசத்துடனும், பல ஆண்டுகளாக, முதுமையிலும் தன் விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். யோசேப்பும் மரியாளும் தங்கள் அழகான ஆண் குழந்தையை கோயிலுக்குக் கொண்டு வந்த நாளில் அவள் அங்கு இருந்தது தற்செயலான நிகழ்வு அல்ல. சிமியோன் தீர்க்கதரிசி குழந்தை இயேசுவை ஆசீர்வதிப்பதை அன்னாள் கேட்டாள். இந்த குழந்தை தனது நம்பிக்கைகளையும் கனவுகளையும் மேசியாவாக நிறைவேற்றும் என்று அவர் அறிவித்ததை அவள் கேட்டாள் - "புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்கு மகிமையாகவும்.." அந்நாளில் அன்னாளின் பொறுமைக்கும் விசுவாசத்திற்கும் தேவன் வெகுமதி அளித்தார்.

தேவனுடைய பிள்ளைகளாக வெளிப்பட




***Jochebed's Son Moses, found and saved***

விரும்புவோருக்கு பொறுமை மிகவும் பயனுள்ள கருவி என்று அண்ணாள் நமக்கு கற்பிக்கிறாள். (ரோமர் 8:19)

### இயேசுவின் தாய்யாகிய மரியாள்

பொறுமை என்பது ஸ்திரமான விசுவாசம் மற்றும் தேவனுடைய குறித்த நேரத்தின் மேலுள்ள நம்பிக்கையாகும். நம்பிக்கையின்மையினால் வரும் விரக்தியையும், மரணத்தின் நிழலின் பள்ளத்தாக்கின் வஞ்சகத்தையும் பொறுமை வெல்லும். தேவனுடைய ஒவ்வொரு விசுவாசமுள்ள ஸ்திரீயின் மனதையும் பொறுமை பலப்படுத்துகிறது மற்றும் அவளது இருதயத்தில் அது ஆழமாக குடியேறி ஒரு நம்பிக்கையுடன் உறுதிப்படுகிறது.

மரியாளைப் பொறுத்தவரை, அவளுடைய பொறுமை மற்றும் அவளுடைய வாழ்க்கையில் முன்னோடியில்லாத வேலையும் தேவனுக்கு நித்தமும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. காபிரியேல் என்ற வல்லமைமிக்க வேத தூதன் உறுதி மொழிகளை அவளுக்கு வழங்கியபோதிலும், மரியாள் தனக்கு திருமணமாகாத நிலையில் இநத கர்ப்பத்தோடு சமூதாயத்தில் நித்தமும் வாழ வேண்டியிருந்தது. மரியாளும் யோசேப்பும், அவளுடைய குடும்பத்தினர், நண்பர்கள் இன்னும் மற்றும் பலரின் வாய்மொழி தாக்குதல்களை நித்தமும் எப்படி சகித்திருந் திருப்பார்கள்?

இந்த அற்புதமான நிகழ்வின் காரணமாக யோசேப்பு எவ்வளவு வாய்ப்புகளை இழக்க நேர்ந்திருக்கும் ? அவர்கள் எப்படி தேவைகளை பூர்த்தி செய்திருப்பார்கள் ? மிகுந்த பொறுமை தேவைப்பட்டிருக்கும். அந்த பொறுமை தேவன் தம் வேலையைச் செய்ய அனுமதித்தது. அதாவது அவர்களுக்கு முன்னால் இருக்கும் எல்லா சிரமங்களையும் சமாளிக்க தேவன் அவர்களுக்கு உதவ அனுமதித்தது. மரியாள் கர்ப்பம வெளிப்பட்ட நேரத்தில், அவள் தனது உறவினரான எலிசபெத்தைப் பார்க்க ஒரு கழுதையின் மேல் ஒரு

கடினமான பயணத்தை மேற்கொண்டாள். யோவான் ஸ்நானகனாக பிறக்க இருந்த எலிசபெத்தின் குழந்தை, மரியாள் பேசும் போது அவள் வயிற்றில் துள்ளி குதித்தது. மரியாளின் விசுவாசமுள்ள பொறுமைக்கு இது தேவனிடமிருந்து ஒரு நுட்பமான உறுதிப்படுத்தலாக இருந்திருக்கலாம்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தைத் தொடர்ந்து, எலிசபெத்தின் முன் மரியாள் தன் பரலோகத் தகப்பனுக்குப் புகழ்ச்சியை பலியாகச் செலுத்தினாள். (லூக்கா 1:46-55) மரியாள் தனது அழகான பேச்சுவழக்கில், நம்முடைய விசுவாசத்திற்கான உயர்ந்த சூழ்லையும் கவனத்தின் தெளிவையும் நம்முடைய பொறுமைக்கான புதிய ஆர்வத்தையும் காட்டுகிறாள். நாம் தேவனுடைய புது சிருஷ்டிகளாக இருப்பதால், தேவன் ஒவ்வொரு நாளும் நம்மில் செய்து கொண்டிருக்கும் மகத்தான வேலையைப் பற்றிய நம்பிக்கையுடன் நாமும் இருக்க வேண்டும் என்பதை அவள் நமக்கு காட்டுகிறாள்.

**மரியாளின் பலியின் காணிக்கை நமக்கான ஒரு மாதிரியாக உள்ளது:**

● தேவனுக்கு நிபந்தனையற்ற பாராட்டு (வசனம் 46) ● அவள் ஆவியில் பலப்படுத்தப்பட்டாள் (வசனம் 47) ● இந்த கனத்திற்கான அவரது தேர்வில் பணிவும் நம்பிக்கையும். (வசனம் 48) ● தேவனை பயபக்தியோடு வணங்குபவர்களுக்கு அவருடைய இரக்கம் வழங்கப்படுகிறது. (வசனம் 50) ● மனுஷனுடைய பெருமைக்கு முன்னால் தேவன் அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை செயல்படுத்துகிறார். (வசனம் 51) ● தேவனுடைய நீதியின் மேல் பசி தாகமுள்ள அனைவரையும் தேவன் திருப்தியாக்குகிறார். (வசனம் 53) ● தேவன் தம் ஜனங்களுக்கு இரக்கம் பாராட்டுகிறார். (வசனம் 54) ● ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் மேல் நம்பிக்கை. (வசனம் 55)

சிமியோனின் தீர்க்கதரிசனத்தின் கூடுதலான வார்த்தைகளை தாங்குவதற்கு மரியாளின் பொறுமைக்கு மிகுந்த விசுவாசமும் தேவைப்பட்டது. "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான். " (லூக்கா 2:35) ஒரு நாள் தன் மகன் மனிதாபிமானமற்ற நிலையில் நடத்தப்படுவதை அவள் காணும் போது, அவளுடைய மகிழ்ச்சி பெரும் துக்கமாக மாறும்.

**யோகபேத் (யாத்திராகமம் 2:1-10)**

சிறைபிடிக்கப்பட்ட எபிரெயர்களின் மீது பெரும் அதிகாரம் கொண்டிருந்த பார்வோன் அவர்களின் அடக்க முடியாத எதிரியாக இருந்தான். புதிதாகப் பிறக்கும் அனைத்து எபிரெய ஆண் பிள்ளைகளையும் கொல்ல பார்வோன் கட்டளையிட்ட காலத்தில் யோகபேத் வாழ்ந்து வந்தாள். ஆனால் அவள் ஜீவனுள்ள தேவனுடைய வல்லமையை நம்பி, தேவனுடைய பாதுகாப்பில் தன் குமாரனைக் காப்பாற்ற ஒரு வழியைக் கண்டுபிடித்தாள்.

விசுவாசமுள்ள யோகபேத் அவளுடைய நம்பிக்கையிலிருந்து திரும்பவில்லை. பார்வோன் கட்டளையிட்டபடி, சிறுவனை ஆற்றில் வீசுவதற்குப் பதிலாக, அவள் தன் மகனை மூன்று மாதங்கள் மறைந்து வைத்தாள். அவளால் அவனை இனி மறைக்க முடியாதபோது, பார்வோன் கட்டளையிட்டபடியே அவனை நதியில் போட்டாள், ஆனால் அவள் அவனுக்கு ஒரு சிறிய பேழையை செய்து அவனை பாதுகாத்தாள்! சர்வல்லமையுள்ள தேவன் மீதும், தன் மகனைக் காப்பாற்றும் அவருடைய வல்லமையின் மீதும் அவள் நம்பிக்கை வைத்து, அவளுடைய பொறுமையை வெளிப்படுத்தினாள். ஜலப்பிரளயத்தின் போது விசுவாசமுள்ள நோவா மற்றும் அவரது குடும்பத்தினரின் அதே அற்புதமான இரட்சிப்பை அவள் எதிர்பார்த்திருக்கவேண்டும்.

தேவன் அவள் குமாரனை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையை யோகபேத் கொண்டிருந்தாள். மிதக்க விட்ட அந்த பேழையை கவனிக்கும் படி அவள் தன் மகள் மிரியாமை அனுப்பினாள்.

பாரவோனின் குமாரத்தில் குழந்தையைக் கண்டு பிடித்து அன்புடனும் இரக்கத்துடனும் நடத்தியபோது, மிரியாமின் விழிப்புணர்வுக்கும், யோகபேத் தேவனுக்காக பொறுமையோடு காத்திருந்ததற்குமான பதில் கிடைத்தது. (யாத்திராகமம் 2:7) யோகபேத் மோசேயின் தாதியாக இருப்பதற்கு தேவன் ஏற்பாடு செய்தார். அவள் அவனை கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் வளர்த்தாள். (யாத்திராகமம்2:8-9)

ஒரு தாய் தன் குழந்தைகளுக்குக் கொடுக்கும் பரிசின் ஒரு பகுதி, அவளிடமிருந்து அவர்கள் பெறும் குணம். மோசே தனது மிகுந்த சாந்தத்தின் ஒரு பகுதியை அவருடைய விசுவாசமுள்ள தாயான யோகபேத்திடமிருந்து பெற்றதாக நாம் ஊகிக்கலாம். தேவன் அவருடைய இஸ்ரயேல் ஜனங்களுக்கு, மோசேவை ஒரு திறமிக்க தலைவராகவும், சாந்தமுள்ள பேய்ப்பராகவும் பயன்படுத்தினார். அவரது தாயின் சாந்தமான மற்றும் தேவன் மேல் அவள் கொண்டிருந்த பொறுமையான நம்பிக்கை அவரிடம் பிரதிபலித்தது.

சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று இயேசு பிற்பாடு சொன்ன தீர்க்கதரிசனம் போலவே, யாக்கோபின் இக்கட்டு காலத்தின் போது, பூமியெங்கிலும் சாந்தகுணமுள்ள மோசே, உயிர்த்தெழுப்பப்பட்ட முற்பிதாவாக, தேவனுடைய கருவியாக இஸ்ரயேல் தேசத்தை வெற்றிக்கு இட்டுச் சொல்வார் என்று நாம் உறுதியாக நம்பலாம். (மீகா5:5, சகரியா12:6) பொறுமையுள்ள இந்த விசுவாசமுள்ள பெண்ணான யோகபேத்தின் நீடித்த பாரம்பரியத்தில் என்ன ஒரு அழகான வாழ்க்கை வட்டம் காணப்படுகிறது!

**சூனேமியாள் ஸ்திரீ (2 இராஜாக்கள் 4:8-37)**

பெரும்பாலும் ஒரு நபரின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு சிறிய தொகுப்பை வசனங்கள் வழங்குகிறது. சூனேமியா ஸ்திரீயின் நிலையும் அப்படிதான். எலிசா ஒரு பரிசுத்தமானவர் என்பதைச் சரியாக உணர்ந்துகொண்ட விசுவாசமுள்ள ஸ்திரி என்று அவளுடைய சுருக்கமான வரலாறு சாட்சியமளிக்கிறது.

இந்த தேவனுடைய மனுஷனுக்கு சேவை செய்ய அவள் தனது நேரத்தையும் பொருளையும் எவ்வாறு பலி செலுத்தினால் என்பதை இது விவரிக்கிறது. அவளுடைய அதிசயமான சிறுவன் தன் தந்தையுடன் வயலில் வேலை செய்யும் போது, நோய்வாய்ப்பட்ட போது, அவளுடைய விசுவாசத்தின் பொறுமையை நாம் காணலாம். அவளுடைய குமாரன் கொண்டுவரப்பட்டபின் மரித்து போனான். அவள் மிகுந்த துன்பப்பட்டாள். அவள் அவனை காலியாக இருந்த எலிசா தீர்க்கதரிசியின் படுக்கையில் கிடத்தி, அவருடைய உதவியை எதிர்பார்த்து, அவரை நோக்கிப் புறப்பட்டாள். இதேபோன்ற சூழ்நிலையில் பெரும்பாலான தாய்மார்கள் நிச்சயமாக தங்கள் நோய்வாய்ப்பட்ட குழந்தையின் பக்கத்தில் இருப்பார்கள், ஆனால் இந்த தாய் தேவனுடைய விசுவாசமுள்ள தீர்க்கதரிசியின் உதவியை நாடுவதற்காக எலிசாவின் படுககையில் தன் மகனை விட்டு சென்றாள். ஒரு தாயின் கவனிப்புக்கு எல்லையே இல்லை. இந்த விசுவாசமுள்ள ஸ்திரீயின் விஷயத்தில், அன்பும் பொறுமையும் அவளைத் தெடரும் இயந்திரங்களாக இருந்தது.

சிறுவனின் நோய் மற்றும் அவனுடைய இறப்பைப் பற்றி எந்த விவரங்களையும் தேவன் எலிசாவுக்கு முன் அறிவிக்கவில்லை. சிறுவனின் நிலைமையைப் பற்றி அவருக்கு தெரிவித்தபோது, அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு ,தன் வேலைக்காரனாகிய கேயாசிக்கு முன்பாகச் சென்று குழந்தையின் மீது தனது கோலை வைக்கும்படி தனது வேலைக்காரனுக்கு கட்டளையிட்டார். இருப்பினும் சூனேமியாள் ஸ்திரீ எலிசாவின் மேல் முழுமையாக சார்ந்திருந்தாள்.

அவளுடைய செயல்கள் தேவன் மீது மிகுந்த

பயபக்தியையும், வெகுமதியை எதிர்பார்க்காமல் அவளுடைய ஊழியர்களை ஆசீர்வதிக்கும் விருப்பததையும் வெளிப்படுத்தியது. தேவனுடைய விசுவாசமுள்ள தீர்க்கதரிசியின் உதவியை நாடுவதற்காக தன் மகனை விட்டுவிட்டு சென்ற ஒரு தாயின் அன்பின் எதிர்மறையான பயன்பாட்டை அவள் வெளிப்படுத்தினாள். மிக பெரிய துக்கத்தை எதிர்கொள்ளும் சூனேமியாள் ஸ்திரீயின் முன் முயற்சி மற்றும் பொறுமையான நம்பிக்கையின் பயனாளிகளாக நாம் இருக்கிறோம்.

**சாரிபாத்தின் விதவை (1 இராஜாக்கள் 17:8-16)**

நமக்கான தேவன் வைத்திருக்கும் இலக்கை நோக்கி செல்லுவதை நாம் நிறுத்தும்போழு, நம்முடைய உழைப்பு, பொறுமை மற்றும் விசுவாசத்தின் பலன் விசுவாசத்தின் பலன் வளர்ச்சியடையாமல் போகும். அனைத்து அறிவுக்குரிய குறிகாட்டிகளும் வரவிருக்கும் தோல்வியை பரிந்துரைக்கும் போது பொறுமையுடன் நமது நம்பிக்கையை பலப்படத்த சாரிபாத்த விதவை நமக்கு கற்பிக்கிறாள்.

சாரிபாத்த விதவையும் அவள் மகனும் பட்டினியால் வாடினர். தேவனுடைய கட்டளையின் பேரில், எலியா தீர்க்கதரிசி அவள் வீட்டிற்குச் சென்று, அவளுடைய அவநம்பிக்கையான சூழ்நிலையை அறிந்து, அவளது கடைசி உணவில் இருந்து ஒரு சிறிய அப்பத்தை அவருக்காக தயாரிக்க சொன்னார்.

தேவன் மழையை அனுப்பி, தற்போதைய பஞ்சத்தை நிறுத்தும் வரை, அவளுடைய மாவும் எண்ணெயும் காலியாகாது என்று எலியா உறுதியளித்தார். "அவளிடம் இருந்த அனைத்தையும்" எலியாவுக்கு உணவளிக்க, பொறுமையாக பலி செலுத்தின பின், அவளுடைய கீழ்ப்படிதலுக்கு வெகுமதி கிடைத்தது. தேவன் தனது வாக்குத்தத்தத்திற்கு உண்மையாக இருந்தார்.

சில சமயங்களில் நாம் பிரச்சனைகளை சந்திக்கும் போது தேவன் நம் நம்பிக்கையை சோத்திப்பார். மனம் தளராமல் இருப்போம், மிகப் பெரிய தனிப்பட்ட சிரமங்களை எதிர்கொண்டாலும் கூட, நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கான தேவனுடைய இலக்கை நாம் தடைசெய்யாமல் இருப்போம்.

**முடிவுரை**

தேவனுடைய ஒளியைக் காண போராடிய விசுவாசமுள்ள பெண்களை நாம் வேதாகமம் முழுவதும் பார்க்கிறோம். ஒவ்வொரு போராட்டத்தின் மூலமும், பணிவு, பொறுமை மற்றும் பயபக்தியுடன் தேவன் தங்கள் ஜெபங்களுக்கு பதிலளிப்பார் என்று அவர்கள் நம்பினர். அவர்கள் ஒவ்வொருவரும் நம்பிக்கை இழந்து, கோபம் கொண்டு அல்லது தவறு செய்த நேரங்களை அனுபவித்தனர். ஆனாலும், தேவன் அவர்களுடைய விசுவாசத்திற்கு வெகுமதி அளித்தார். பொறுமை என்ற நற்குணத்தின் வழிக்காட்டுதலின் மூலம் மட்டுமே தேவனுக்கு முன் பணிவை வளர்த்துக் கொள்ளமுடியும் என்பதை நாம் இந்த ஸ்திரீகளின் அனுபவங்களின் மூலம் காண்கிறோம்.

அவர்களின் சரித்திரத்தை படிக்கும்போது, வளரும் குணாதிசயத்தில் வலிமையைக் காண்கிறோம். அவர்களின் சாட்சியுள்ள வாழ்க்கையின் மூலம், அவர்கள் தங்கள் நம்பிக்கையையும் பொறுமையையும் நாம் ஆராய்வதற்கு வெளிப்படுத்துயிருக்கிறார்கள். பொறுமை என்பது ஒரு "வாழ்க்கையின் நெம்புகோல்" என்பதை அவை வெளிப்படுத்துகிறனது. தேவனுடனான நம்முடைய நடைப் பயணத்தில் வெற்றிக்கான கருவிகளில் ஒன்றாக பொறுமை என்ற "வாழ்க்கை நெம்புகோலை" எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கு அவை ரு எடுத்துக்காட்டாக உள்ளது.

# தேவ பக்தி என்பது பெரிய ஆதாயம் தேவபக்தி



**Len Griehs**

"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது, தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது." (1 திமோத்தேயு *4:8*)

கடந்த ஐம்பது ஆண்டு களில் பெண்கள் தடகளம் (athletics) பிரபலமடைந் துள்ளது. மினசோட்டா பல்கலைக் கழகத்தில் விளையாடும் பெண்கள் மற்றும் விளையாட்டு களில் பெண் களுக்கான ஆராய்ச்சிக்கான டக்கர் மையத்தின்படி சவாலான தொடக்கத்தில் இருந்து, இன்று வரை ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டில் பங்கேற் பாளர்களில் நாற்பது சதவீதம் பெண்களே. இப்போது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் தங்கள் தடகளை சிறமைகளை வெளிப்படுத்த முடிகிறது. நம்முடைய பாடப் பகுதியில், கிறிஸ்த ஆண்டளுக்கும் பெண்களுக்கும், உடற்தகுதியை விட தெவபக்தி நித்தியமானதால், அதிக நன்மை பயக்கும் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்துகிறார்.

தேவபக்திக்கு "தேவபக்தி மற்றும் பரிசுத்தமான வாழ்க்கை" என்று வேதாக அகராதிகள் வரையறுக்கின்றது. சங்கீதம் 4:3, தேவபக்தியின் மற்றொரு நன்மையை விளக்குகிறது - "பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள். நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்." பரிசுத்தமாக்குதல் - தேவனுடைய பணிக்காக ஒதுக்கப்பட்டிருப்பது - ஒருபெரிய மற்றும் நித்தியமாக வெகுமதி. ஆனால் அதற்கான செலவும் இருக்கிறது. "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்." (2தீமோத்தேயு 3:12) பாவம் நிறைந்த உலகில் தேவனுடைய கொள்கைகளின்படி வாழ விரும்பும் யாவருக்கும் துன்பம் ஒரு வாழ்க்கை முறையாக இருக்கும். துன்பங்களைச் சகிக்கத் தயாராக இருந்த நான்கு பெண்களைப் பற்றி நாம் இங்கு விவாதிக்கிறோம். இவர்கள் தெய்வபக்தியின் முழு உதாரணங்களாக காணப்படுகிறார்கள்.

(1) தெபோராள் (நியாயாதிபதிகள் 4-5)

(2) நகோமி (ரூத 1)


(3) எஸ்தர் (எஸ்தர் 1-4)

(4) மகதலேனாள் மரியாள் (மத்தேயு 27:56)

**தெபோராள்**

"அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபோராள் என்னும் தீர்க்க தரிசியானவள் இஸ்ரயேலை நியாயம் விசாரித்தாள்." (நியாயாதிபதிகள்4:4)

தெபோராள் ஒரு பிரபலமற்ற எபிரெயின் மனைவி, ஆனால் அவள் இஸ்ரயேலின் நியாயாதிபதியாக இருந்தாள். நியாயாதிபதிகளின் 450 ஆண்டு காலத்தில், சோர்வும் மனமடிவும் ஏற்பட்ட



*Deborah and Barak on behalf of Israel*

நேரத்தில் தேவன் தேர்ந்தெடுத்த ஜனங்களை எழுப்ப, தேவனால் இவள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தப் பணிக்காக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே பெண் இவள்தான். "நியாயாதிபதிகளை ஏற்படுத்துவதற்கான நோக்கம் கிருபை மற்றும் நன்மையை பயக்கும் ஒன்றாக இருந்தது - அது ஜனங்களை விடுவித்து, ஆசீர்வதிப்பதே தவிர, அவர்களைக் கண்டித்து தண்டிப்பதற்காக அல்ல. ஒரு நியாயாதிபதியின் பதவியைப் பொறுத்தவரை, ஆசீர்வதிக்கப்பட்ட நம்முடைய ஆண்டவர் இயேசு உலகை நீதியோடு நியாயந்தீக்க வருகிறார் என்ற வாக்குத்தத்தம் எள்ளவும் மதிப்புமிக்கதாக உள்ளது." (Reprint 1869) தெபோராள் ஒரு மீட்பராக மட்டும் அல்ல, ஜனங்களுக்கு தெய்வீக ஆலோசனைகளைக் கொண்டு வரும் ஒரு ஆலோசகராகவும் இருந்தாள். (நியாயாதிபதி4:5) இருப்பினும், அவர்களின் எதிரிகளிடமிருந்து விடுதலைக்கான அழைப்பு வந்தபோது, தெபோராள் ஒரு இராணுவத்தையும் அதன் தலைவரையும், 900 இரும்பு கானானிய இரதங்களை எதிர்த்துப் போரிட துாண்டினாள். (நியாயாதிபதிகள்4:3) எப்படிப்பட்ட விசுவாசத்தை அவள் கொண்டிருந்திருக்கவேண்டும் ! எந்த ஆயுதங்களை விட தேவனுடைய வார்த்தை வலிமையானது என்று பவுல் சொன்னபோது, தெபோராளின் தெய்வீக முன்மாதிரி அவரது மனதில் நுழைந்திருக்கலாம். (எபிரெயர் 4:12)

எபிரெயர் 11:32இல் உள்ள விசுவாச வீரர்களின் பட்டியலில் உள்ள பாராக், ".. நீ என்னோடேகூட வந்தால் (யுத்தத்திற்கு) போவேன், என்னோடே கூடவராவிட்டால், நான் போக மாட்டேன் என்று.." தெபோராளிடம் கூறினார். (நியாயாதி பதிகள்4:8) தெபோராவை ஜனங்கள் எவ்வளவு மதித்திருந்தார்கள் என்பதற்கு சாட்சியாக ஒரு ஆண் பெண்ணிடம் வைத்த கோரிக்கைளில் இதுவும் ஒன்றாக வேதத்தில் காணப்படும் மிகவும்



*Ruth elected to stay with Naomi*

அசாதராணமான பதிவாகும். இஸ்ரயேலர் வனாந்தரத்தில் அலைந்து தரிந்தபோது இதே போன்ற நிகழ்வு மோசேயின் தெய்வீகத்தன்மையைப் பிரதிபலித்தது. அவர் மலையில் இருந்தால், அமலேக்கியர்களின் மீது தேவன் வெற்றியைக் கொண்டுவருவார் என்ற நம்பிகைகளை இஸ்ரயேல் போர் வீரர்களுக்கு அளித்தது. (யாத்திராகமம்17:8-16) போருக்குச் செல்ல ஒப்புக்கொண்ட தெபோராள், வெற்றியின் பெருமையைப் பாராக் பெற மாட்டார், அது ஒரு பெண்ணை போய் சேரும் என்று தீர்க்கதரிசனம் கூறினாள். (நியாயாதிபதிகள்4:9) முன்னறிவிக்கப் பட்டபடி, போர் முடிந்து, இஸ்ரயேலர்கள் வெற்றி பெற்றதாகக் கூறும்போது, கானானியப் படையின் தளபதியான சிசேரா, கேனியப் பெண்ணான யாகேலால் கொல்லப்பட்டார்.

நியாயாதிபதிகள் 5ம் அதிகாரம் தெபோராவின் வெற்றிப் பாடலைப் பதிவு செய்திருக்கிறது. அதில் அவள் யெகோவா தேவனுக்கு பெருமை சேர்த்தாள் -

● "இராஜாக்களே, கேளுங்கள், அதிபதிகளே, செவிகொடுங்கள், நான் கர்த்தரைப்பாடி இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுவேன்."

(3ம் வசனம்)

● "ஜனங்களுக்குள்ளே தங்களை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்த இஸ்ரயேலின் அதிபதிகளை என் இருதயம் நாடுகிறது, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்." (வசனம் 9)

● "கர்த்தாவே, உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள், யாவரும் இப்படியே அழியக்கடவர்கள், அவரில் அன்புகூருகிறவர்களோ வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போல இருக்கக்கடவர்கள் என்று பாடினார்கள். பின்பு தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது." (வசனம் 31)

நியாயாதிபதிகள் 5ம் அதிகாரத்தின் முப்பத்தொரு வசனங்களும், தெபோராவின் தைரியத்தையும், அவளுடைய பாடலில் உள்ள விசுவாசத்தையும் எதிரொலிக்கின்றது. இது தேவனிடம் அவளுடைய ஜெபத்தை இரட்டிப் பாக்குகிறது. அவளுடைய தலைமை மற்றும் தெய்வீகத்தன்மைக்கு இறுதிச் சான்றாக, "தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது." என்ற வார்த்தைகளுடன் முடிவடைகிறது.

**நகோமி (ரூத் 1)**

"சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான், போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான், ஓபேத் ஈசாயைப் பெற்றான். ஈசாய் தாவீது இராஜாவைப் பெற்றான்...." (மத்தேயு 1:5, 6)

மோவாபிலிருந்து குடியேறிய ரூத், இயேசுவின் வம்ச வறலாற்றில் ஒரு முக்கிய நபரானார். மேலும், அவளே ஒரு தெய்வபக்திக்குரிய பெண்ணாக போற்றப்பட்டாள். இருப்பினும், அவளது மாமியார் நகோமியின் தைரியம் மற்றும் விசுவாசத்தின் பிரகாசமான உதாரணம், இந்த உலக இரட்சகரின் வம்சாவளியில் அவள் பங்கேற்பதற்கான அபாயத்தையும், அதற்கான நடவடிக்கையையும் எடுப்பதற்கு அவளை வழிநடத்தியது.

ரூத்தின் புத்தகத்தின் ஆரம்ப வசனம், நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரயேலர் விசுவாச துரோகத்தில் இருந்தபோது, மோவாபின் இராஜாவாகிய எக்லோனால் ஒடுக்கப்பட்ட காலகட்டத்தை குறிப்பிடுகிறது. (நியாயாதிபதிகள் 3) "நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று.... " (ரூத் 1:1) மழையின்மை, முதிற்சி பெறாத பயிர்கள் மற்றும் பஞ்சம் ஆகியவை தார்மீகச் சிதைவு மற்றும் விக்கிரகாரததை காலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை பல பகுதிகள் காட்டுகின்றது. (எடுத்துக்காட்டு , உபாகமம் 11:13-17)

விரோதங்கள் இருந்தபோதிலும், நகோமியின் கணவர் எலிமெலேக்கு தனது குடும்பத்தை அழைத்துக்கொண்டு சவக்கடலுக்குக் கிழக்கே மோவாபின் வளமான மலைப்பகுதிகளில் குடியேறினார். யூதேயா மலைகளுக்கு கிழக்கே உள்ள ஒரு பீட பூமியில் நம்பகமான மழைப் பொழிவு விவசாயத்தை அனுமமதித்தது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வெளிப்படையான வறட்சியால் இந்த தேசம் பாதிக்கப்படவில்லை என்றும் மேலும் மோவாபின் கீழ் இருந்த காலத்தில் குடும்பம் பயணிக்க முடிந்தது. (நியாயாதிபதிகள் 3:12-30ல் குறிப்பிட்டபடி பதினெட்டு வருடங்களாக இருக்கலாம்.) அந்தக் குடும்பம் அங்கிருந்த பத்தாண்டுகளில், மோவாபியப்



*Queen Esther approaches the king*

பெண்களை மணந்த நகோமியின் இரண்டு குமாரர்களும் கணவரும் இறந்து போனார்கள். பின்னர் நகோமி தனது அனுபவங்களை மாரா ("சகப்பு") என்ற புனைப்பொயருடன் தொடர்புப்படுத்தினாள். (ரூத்1:20) ஏறக்குறைய அதே நேரத்தில், இஸ்ரயேலின் அடக்குமுறை ஏகூத்தின் விடுதலையுடன் முடிவுக்கு வந்தது. (நியாயாதிபதி 3:30) யூதா தேசத்திற்கு மழை திரும்பியது. நவோமி தான் நேசித்த தேசத்திற்குத் திரும்புவதற்கான நல்ல அடையாளமாக இருந்தது.

முதலாவதாக, குழந்தை இல்லாத தன் மோவாபிய மருமகள்கள் தங்கள் சொந்த மக்களிடம் திரும்பி, மறுமணம் செய்துகொள்ளும்படி அவர்களுக்கு பரிந்துரைத்தாள். (ஏனெனில் அவளுக்கு வேறு குமாரர்கள் இல்லாதத்தினால்) நகோமி இதை ஏன் அவர்களிடம் சொல்ல வேண்டும்? நியாயப்பிரமாணத்தில், லேவியராகமம் 25ம் அதிகாரத்தில் உள்ள சட்டத்தை மதித்து அவள் விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். பின்னர் அது ரூத்துடனான அவரது வாழ்க்கையில் முக்கிய பங்கைக் கொண்டிருந்தது.

ரூத்தோ நகோமியுடன் ஒட்டிக்கொண்டு, அவளுடன் செல்லும்படி அவளிடம் கெஞ்சினாள். (ரூத் 1:16) 16ம் வசனத்தில் ரூத்தின் அறிக்கை வேதத்தில் மிகவும் திகைக்கவைக்கும் ஒன்றாகும். "அதற்கு ரூத் - நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம், நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன், மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். " (ரூத் 1:16,17) நகோமி தயக்கத்துடன் ஒப்புக்கொண்டாள், இருவரும் யூதாவுக்கு வந்தடைந்தனர், அப்போது நிலம் புதுப்பிக்கப்பட்டு முழுமையான அறுவடை செய்யத் தொடங்கப்பட்டது.

ஒரு அந்நியராக, ரூத் நகோமியின் மீதுள்ள அன்பினால் வழிநடத்தப்பட்டாள். அவர்களின் வாழ்வாதாரத்திற்காக நியாயப்பிரமாணத்தின்படி (லேவியராகமம்19:9) தானியங்களை பொறுக்கத் தயாரானாள். போவாஸின் களத்தில் ரூத்தின் அனுபவத்தை நகோமி அறிந்தபோது (ரூத்2:8-12, 3:1) தேவனுடைய கரம் கிரியை செய்வதை நகோமி கண்டு, தேவன் அவர்களுக்கு முன் வைத்திருப்பதை உடனடியாக உணர்ந்தாள். "அப்பொழுது நகோமி தன் மருமகளைப் பார்த்து - உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தரராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள், பின்னும் நகோமி அவளைப் பார்த்து - அந்த மனுஷன் நமக்கு நெருங்கின உறவின் முறையானும் நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளிகளில் ஒருவனுமாய் இருக்கிறான் என்றாள். " (ரூத்2:20) நகோமி ரூத்தை மணப்பெண்ணாக உடுத்திக்கொண்டு, இரவில் போவாஸின் வயலுக்கும் போகும்படி அறிவுறுத்தினாள் (ரூத்3:3, எசேக்கியேல் 16:9-12 ஒப்பிடவும்) ரூத்தின் செயல்கள் திருமணத்திற்கான கோரிக்கையாக அர்த்தம் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

நகோமியின் தார்மீக நேர்மை ஒருபோதும் கேள்விக்குள்ளாக் கப்படவில்லை. மேலும் ரூத்தின் மரியாதை அவளது கீழ்ப்படிதலின் மூலம் காட்டப்பட்டது. இது விசுவாசம் மற்றும் தெய்வபக்தியின் அழகான சித்திரத்தை அளிக்கிறது. (ரூத்3:11) "போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான், அவள் அவனுக்கு மனைவியானாள், அவன் அவளிடத்தில் பிரவேசித்தபோது, அவள் கர்ப்பந்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெறக் கர்த்தர் அநுக்கிரகம்பண்ணினார். நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து அதை அளர்க்கிற தாயானாள்." (ரூத்4:13, 16) அந்த குழந்தை, ஓபேத்,தாவீதிக்கு தாத்தாவானார்.

**எஸ்தர்**

"நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள், நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு இராஜமேன்மை கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும் என்று சொல்லச்சென்னான்." (எஸ்தர்4:14)

யூத ஏற்பாட்டில் ஒரு பெண்ணின் பெயரைக் கொண்ட இரண்டாவது புத்தகமான எஸ்தர், பெர்சியாவில் அழிவிலிருந்து இஸ்ரயேல் ஜனங்களை விடுவிக்க தேவன் எவ்வாறு அழகான ஒரு போட்டியைப் பயன்படுத்தினார் என்பதைக் காட்டுகிறது. தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற உலக நிகழ்வுகளை அவர் எவ்வாறு மேற்கொள்கிறார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். இளம் யூத கன்னி பெர்சியாவில் தனது உறவினரான மொர்தெகாயின் வழிகாட்டுதலின் கீழ் வளர்ந்தார். இராஜாவால் தனது பட்டத்து அரசியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்தர், தனது யூத பாரம்பரியத்தை வெளிப்படுத்தாமல், அரண்மனையின் ஆடம்பரத்திற்குள் கொண்டு வரப்பட்டாள். அங்கு அவள் தன் பராமரிப்பாளர்களிடம் தயவைப் பெற்றாள். இஸ்ரயேலின் முன்னாள் எதிரியான அமலேக்கிய அரசனாகிய ஆகாக்கின் வழித்தோன்றலான தீய ஆமானை எதிர்கொண்டாள்.

அவனுடைய மூதாதையரைப் போலவே, ஆமானும் யூதர்களை வெறுத்தான், குறிப்பாக அகாஸ்வேரஸின் மேல் செய்யப்பட்ட படுகொலைச் சதியைப் புகாரளித்து அவருக்கு ஆதரவாக இருந்த மொர்தெகாயை அவன் வெறுத்தான். யூதர்கள் மேல் பொறாமை கொண்ட ஆமான், அவர்கள் ஒருபோதும் ஒத்துப்போக மாட்டார்கள் என்பதை அறிந்து, இராஜாவுக்கு வலது கையாக இருந்த தன்னை வணங்க மறுக்கும் எவருக்கும் மரணத்தை கட்டளையிடும்படி அகாஸ்வேரு இராஜாவை ஒத்துக் கொள்ளவைத்தான். பெர்சியாவின் சட்டத்தில், கோரிக்கையின் பேரில் தவிர இராஜாவுக்கு முன் ஆஜராக தடை விதிக்கப்பட்டிருந்தாலும், ,இராஜாத்தியாகிய எஸ்தர், மொர்தெகாயின் சவாலை ஏற்றுக்கொண்டது, அவளுடைய நற்பண்பு, விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் வலிமையை வெளிப்படுத்துகிறது. "இவ்விதமாக சட்டத்தை மீறி, இராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன், நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்." (எஸ்தர்4:16)

முடிவு அறிந்ததே. எஸ்தரின் தைரியம் அவளுடைய ஜனங்களைக் காப்பாற்றியது மேலும், பெர்சிய சாமராஜ்யத்தில் யூதர்கள் மீது தோன்றிய அச்சுறுத்தலை நீக்கியது. மரணத்திலிருந்து தப்பிய யூதர்கள், பூரிம் பண்டிகையைக் கொண்டாடினர். (எஸ்தர்9:32)தன் ஜனங்களைக் காப்பாற்ற தேவனால் பயன்படுத்தப்பட்ட , தெய்வீகப் பெண்ணான எஸ்தரின் செயல்களை இன்னும் நினைவூகூரப்படுகிறது.

**மகதலேனாள்**

"இயேசு அவளை நோக்கி - மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து - ரபூனி என்றாள், அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்." (யோவான் 20:16) மரியாள் என்ற பெயர் புதிய ஏற்பாட்டில் 51 பத்திகளில் காணப்படுகிறது மேலும் ஆறு பெண்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் மகதலேனாள் மரியாள். இவள் உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்ட முதல் நபரும், புதிய ஏற்பாட்டில் தெய்வ பக்தியுள்ள, அர்ப்பணிக்கப்பட்ட பெண்களுக்கான உதாரணமாவாள்.

உயிர்த்தெழுதலைப் பற்றி யோவானின் பதிவில், இயேசு உயிர்த்தெழுந்தப் பிறகு, மரியாள் அதிகாலையில் இயேசுவை சந்தித்த பரபரப்பான செய்து உள்ளது. உயிர்த்தெழுந்த நம் ஆண்டவரைக் காணும் முதல் நபர்களில் யார் இந்த மரியாள் ?

மகதலேனாள் மரியாள் கொண்டிருந்த சிறப்புப் பண்புகள், அவளை இயேசுவோடு நெருக்கமாக இணைத்தது என்று யோவான் பதிவிடுகிறார். மேலும் இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்ப முடியாத மற்றவர்களுக்கு உத்வேகத்தையும் ஊக்கத்தையும் அளித்தது. அந்த "தோட்டத்தில்" மரியாளுக்கும் இயேசுவுக்கும் இடையே நடந்த மென்மையான உரையாடல், அந்த நாளிலிருந்து விசுவாசிகளை ஊக்கப்படுத்தியுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, இதற்கு இடையில், லூக்கா 7:36-50வில் பெயரிடப்படாத பாவமுள்ள பெண்ணுடன் தொடர்புப்படுத்தப்பட்டு. மகதலேனாள் மரியாளின் குணம் இழிவுபடுத்தப்பட்டது. அவளுடைய உண்மையான மற்றும் உறுதியான பக்தி அடுத்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, அங்கு ஏழு பிசாசுகள் வெளியேறிய பின் இயேசுவைப் பின்பற்றுகிறவளாக அவள் தோன்றுகிறாள். (லூக்கா 8:2, 3) {மாற்கு 16:9இல் இயேசுவால், இந்த ஏழு பிசாசுகள் விரட்டப்பட்டாலும், அந்த பத்தியின் நம்பகத்தன்மை சந்தேகததிற்குரியதாக உள்ளது. இயேசு முக முகமாக அவருடைய புதிய இயல்பில் (அவரது தோற்றம் மனிதனாக இருந்தாலும்) தரிசனமானார்.}

இயேசுவின் நெருங்கிய சீஷர்களால் கூட புரிந்து கொள்ள முடியாதபோதிலும், ஒரு போதும் தளராத தைரியமும், பக்தியும் கொண்ட பெண்ணான மகதலேனாள் மரியாள் சிறப்பாக குறிப்பிடப்படுகிறாள். (லூக்கா 24:11) அவளுடைய கடைசி வார்த்தைகள் இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது, "நான் கர்த்தரை கண்டேன்."(யோவான் 20:18) சந்தேகத்திற்கு இடமின்றி அவளது மிகுந்த விசுவாசமும் பக்தியும், இயேசு தான் உயிர்த்தெழுந்த ஒரு பெரிய சத்தியத்தை அவளுடன் பகிர்ந்து கொள்ள தூண்டியது. "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்." (யோவான் 20:17) கற்பனை செய்து பாருங்கள்! உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் பார்த்தவர்களில் மரியாள் ஒருவர்.

மகதலேனாள் மரியாளைப் பற்றி நாம் படிக்கும் கடைசி விவரம் தோட்டத்தில் நடந்த உரையாடல். ஒருவேளை அவள் எருசலேமுக்கோ அல்லது கலிலேயாவின் கரையிலுள்ள தன் சொந்த ஊருக்கோ திரும்பியிருக்கலாம். அவள் எஞ்சியிருந்த ஆண்டுகளில் எங்கிருந்தாலும், இயேசுவை மேசியாவாக மற்றவர்கள் நம்புவதற்கு, ஊக்குவிக்கும் கருவியாக அவள் இருந்திருக்கவேண்டும். துரதிர்ஷ்டவசமாக, கத்தோலிக்க மதம் அவளை பாவிகளின் ஆதரவான துறவி என்று போற்றிகிறது. உண்மையில், மகதலேனாள் மரியாள் மிகுந்த விசுவாசம் கொண்ட ஒரு தெய்வீகப் பெண்மணி. அவள் தன் போதகளை ஒருபோதும் நிராகரிக்கவில்லை. இப்போது மகிமை அடைந்த இயேசுவை முகமுகமாய் பார்க்க, உறங்கிக் கொண்டிருக்கும் பரிசுத்தவான்ளுடன் எழுப்பப்பட்ட அவளுடைய வார்த்தைகளை நாம் கற்பனை மட்டுமே செய்து பார்க்க முடியும். "ரபூனி!", அதற்கான பதில், "உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரியே, வருக. என்னுடைய இரஜ்யத்தின் சந்தோஷங்களுக்குள் பிரவேசி!"

## முடிவுரை

தெய்வ பக்தியுள்ள ஜனங்களை வளர்க்க பாதகமான சூழ்நிலைகள் பயன்படுத்தப்படுகிறன்றன. இந்த நான்கு பெண்களும் நம் அனைவருக்கும் பிரகாசமான சிறந்த உதாரணம். நம்முடைய அர்ப்பணிப்பையும் தத்தம் செய்தலையும் சோதிக்கும் கடினமான சூழ்நிலைகளை நாம் சந்திக்கும் போது, "இது போன்ற ஒரு காலத்திற்கு நீங்கள் இந்த நிலைக்கு இன்னும் வரவில்லையா என்று யாருக்குத் தெரியும்? "“Who knows whether you didn't come into this position for a time such as this?”என்ற வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ளுவோம்.

# தேவன் அன்பாகவே இருக்கிறார் அன்பு, அகாபே மற்றும் ஃபிலியோ




*James Parkinson*

"அவளால் இயன்றதை செய்தாள்" (மாற்கு*14:8*)
— *James Parkinson*

ஒருவருக்கொருவர் மேலுள்ள அன்பு கிரியகளினால் வெளிப்படுகிறது. அன்பின் அளவுகள் வேறுப்பட்டாலும், அது எல்லா ஜனங்களாலலும் விரும்பப்பட்ட ஒரு நல்ல பண்பாகும். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்பேகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான்3:16) தேவனுடைய கிருபையால், இயேசு கிறிஸ்து ஒரு முறை மரித்து, "ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார்." (எபிரெயர்2:9) இருப்பினும், "நான் யாக்கோபை நேசித்து, ஏசாவை வெறுத்தேன்" என்று யெகோவா தேவனும் கூறினார். (மல்கியா1:2-3, ரோமர்9:13) ஏசாவின் சந்ததிகள் அழிக்கப்பட்டது என்பதல்ல, மாறாக யாக்கோபின் சந்ததியினர் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றனர்.

இயேசு அன்பின் வகைகளை வேறுப் படுத்தினார் - யோவான் 21:15"இயேசு சீமோன் பேதுருவை நோக்கி - யோனாவின் குமாரனாகிய சீமோனே,இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா(**1** ) என்றார். அதற்கு அவன் - ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர் - என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். " (16) இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி - யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன் - ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர் - என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். (17) மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி - யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு, ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்.**(2)** நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு- என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்." (யோவான்21:15-17) முதல் இரண்டு முறை, இயேசு பேதுருவிடம் அகாபே அன்புடன் தன்னை நேசிக்கிறீரா என்று கேட்டார். இது அன்பின் உயர்ந்த வடிவம். தெய்வீக அன்பு, இருதயப்பூர்வமான அன்பு) ஆனால் பேதுரு ஃபிலியோ அன்புடன் இயேசுவை நேசிப்பதாக அவர் பதிலளித்தார். (இதுவும் ஒரு உயர் தரமான அன்பு - இரணம், கருணை) மூன்றாவது முறை, பேதுருவால்



*Rebekah introduced to Isaac*

என்ன செய்ய முடியும் என்பதில் இயேசு கவனம் செலுத்தினார். ("அன்பு" என்று பொருள்படும் வார்த்தைகளின் குறிப்பைப் பார்க்கவும்.)

**(1)** கிரேக்கில், அகபாவோ (தேவ அன்போடு நேசிப்பது), இங்கும், 16ம் வசனத்தில் வரும் கேள்வியில் மட்டும் காணப்படுகிறது.15-17 வசனங்களில் உள்ள அன்பின் மற்றொரு வார்ததை ஃபிலியோ (குடும்பத்தை நேசிக்கக்கூடிய அன்பு)

**(2)** அல்லது, உணர்தல்

"நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக.(எபிரெயர், ஆகாப்)" (உபாகமம்6:5) எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை நேசிப்பதற்கான (கிரேக்க அகபாவோ) இந்த கட்டளை மத்தேயு22:37, மாற்கு 12:30-33மற்றும் லூக்கா 10:27விலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

### ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்திய உண்மையுள்ள பெண்கள்

தன்னலமற்ற அன்பின் உதாரணத்தை ரெபேக்கா நமக்குக் காட்டுகிறாள். (ஆதியாகமம் 27) ஏசா மற்றும் யாக்கோபின் பிறப்புக்காகக் காத்திருந்தபோது, யெகோவா ரெபெக்காளிடம் - "இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது, இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் .." என்று கூறினார். (ஆதியாகமம்25:22-23) இருவரும் வளர்ந்ததும், யாக்கோபு தனது சகோதரர் ஏசாவிடமிருந்து சேஷ்ட்ட புத்திரபாகத்தை வாங்கினார்.

ஈசாக்கு முதற்பேறான ஆசீர்வாதத்தை ஏசாவுக்கு கொடுக்க திட்டமிட்டபோதிலும், அந்த ஆசீர்வாதத்தை பெற யாக்கோபே தகுதிப்பெற்றவர் என்பதை ரெபேக்காள் நினைவு கூர்ந்தாள்.



*Deborah the prophetess*

ஆசீர்வாதத்தைப் பெற ஏசாவைப் போல யாக்கோபை நடிக்க வைக்க ரெபேக்காள் தீர்மானித்தார். ஈசாக்கின் உணவுக்காக இரண்டு ஆட்டுக் குட்டிகளையும், யாக்கோபின் இரண்டு கைகளை மறைக்க ஆட்டு முடியையும் கொண்டுவரும் படி யாக்கோபுக்கு அவள் அறிவுறுத்தினாள். ஈசாக்கு தான் ஏமாற்றப்பட்டதைக் கண்டுபிடித்தார், "என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக் கொள்வேனே ...." (ஆதியாகமம் 27:12)என்று யாக்கோபு எதிர்ப்பு தெரிவித்தார். ரெபெக்காள் தன் மகன் மீது ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தி, "என் மகனே உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும், என் சொல்லைமாத்திரம் கேட்டு, நீ போய், அவைகளை என்னிடத்தில் கொண்டுவா என்றாள்." (ஆதிகாயமம் 27:13)

திட்டமிட்டபடி காரியங்கள் நடந்தன, யாக்கோபு முதன்மையான ஆசீர்வாதத்தைப் பெற்றார். ஏமாற்றப்பட்டதை அறிந்த ஏசா, அவர்களின் தந்தை இறந்த பிறகு யாக்கோபைக் கொன்றுவிட வேண்டும் என்று தீர்மானித்தார். இதை அறிந்த ரெபெக்காள் யாக்கோபை தனது உறவினர்களிடம் ஒரு மனைவியை தேடும்படிக்கு அனுப்பினாள்.

ரெபெக்காள் தன் மகன் யாக்கோபை மீண்டும் பார்க்கவே இல்லை என்றாலும், அவனது தன்னலமற்ற அன்பு அவனுடைய உயிரைக் காப்பாற்றியது.

**நியாயாதிபதிகளின் நாட்களில்**

இஸ்ரயேலை அடக்கி ஆண்ட கானானின் இராஜாவுக்கு எதிராக இராணுவத்தை திரட்டும்படி பாராக்கிடம் கூறியபோது, தெபோராள் இஸ்ரயேலில் ஒரு தீர்க்கதரிசியாகவும் நியாயாதிபதியாகவும் இருந்தாள். அவள் பாராக்குடன் செல்லாவிட்டால், போருக்கு போக மாட்டேன் என்று பாராக் மறுத்தான். தெபோராள் அவனுடன் சென்று, அவன் மீதும் வைத்த கருணையையும் , இஸ்ரயேல் தேசத்தின் மீது வைத்த அன்பையும் வெளிப்படுத்தினாள்.

நகோமி தன் கணவனையும் இரண்டு மகன்களையும் இழந்தபோது, அவள் மோவாப் தேசத்தை விட்டு பெத்லகேமுக்கு திரும்பினாள். ஒரு மருமகளாகிய ரூத் நகோமியோடு செல்ல முடிவெடுத்தாள். மிக உன்னதமான அன்புடன், போவாஸுக்கும் ரூத்துக்கும் ஒரு மகன் பிறந்த போது,அவனை நகோமியின் மடியில் வளர்க்க கொடுத்து, "உன்னைக் காக்கும் பொறுப்பினை உடையான ஒருவனை அவர் தாம் அருளியுள்ளார்..."(ரூத்4:13தி.வி) என்று ஊர்ப் பெண்கள் நகோமியைப் பார்த்து கூறினார்ளக்.

**பெயரிடப்படாத ஞானமுள்ள ஞானமுள்ள ஸ்திரீ (2 சாமுவேல் 20)**

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, தாவீது இராஜாவாக இருந்தபோது, அவருடைய அழகான மற்றும் பெருமைமிக்க மகன் அப்சலோம், தனது ஒன்றுவிட்ட சகோதரனிடம் கோபமடைந்து அவரைக் கொல்லத் தேடினான். கொலைச் செய்த பின் அவன் வெளி நாட்டிற்கு தப்பிச் சென்றான். மூன்று வருடங்களுக்கு பின், தாவீது அவனுக்கு மன்னிப்பை அறிவிக்கும்படி வற்புறுத்தப்பட்டார். அதனால் அப்சலோம் திரும்பினான். அப்சலோம் தன் தகப்பனுக்கு எதிராக சதி செய்தான். தாவீதோ எருசலேமிலிருந்து தப்பியோடினார். அடுத்த போரில், (தாவீது இராஜாவின் விருப்பத்திற்கு எதிராக இருந்தாலும்) அப்சலோம் யோவாபால் கொல்லப்பட்டார். தாவீது மீண்டும் எருசலேமுக்கு இராஜாவாகத் திரும்பினார்.

பின்னர், பேலியாளின் மனிதன் என்று விவரிக்கப்பட்ட சேபா என்பவன் தாவீதுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய மற்றவர்கள் தூண்ட முயற்சித்தான். தாவீதின் வலிமைமிக்க மனிதர்களின் தலைவரான யோவாப், இஸ்ரயேலின் வடக்குப் பகுதியில் உள்ள சிறிய நகரமான ஆபேலுக்குத் துரத்தப்பட்டார். முற்றுகை நகரத்தின் சுவரைத் தாக்கத் தொடங்கியது.

ஆபேல் நகரத்தைச் சேர்ந்த பெயரிடப்படாத ஒரு ஞானமுள்ளப் பெண் யோவாபுடன் பேசினாள். அவள் அந்த சிறிய நகரத்தின் வரலாற்றைப் புகழ்ந்து பேசத் தொடங்கினாள், அமைதியான மற்றும் விசுவாசமுள்ள பலரில் தானும் ஒருத்தி என்று யோவாபிடம் உறுதியளித்தாள். இஸ்ரயேலில் உள்ள மற்ற நகரங்களால் மதிக்கப்படும் யெகோவா தேவனின் சொத்தாகிய இந்த நகரத்தை ஏன் அழிக்க வேண்டும் என்று அவள் கேட்டாள்.

ஆபேலுக்கு எதிராக தனக்கு எதுவும் இல்லை என்றும், அங்கு அடைக்கலம் புகுந்த வீனனான சேபாவுக்கு மட்டுமே எதிராக வந்ததாகவும் யோவாப் பதிலளித்தார். "சேபாவை மாத்திரம் ஒப்புக்கொடுங்கள், அப்பொழுது பட்டணத்தை விட்டுப்போவேன் என்றார்.." (2சாமுயேல்20:21) அப்பொழுது அந்த ஸ்திரீ யோவாபைப் பார்த்து - இதோ, அவன் தலை மதிலின்மேலிருந்து உம்முடத்திலே போடப்படும் என்று சொல்லி...தாவீது அரசனிடம் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். "அவள் ஜனங்களிடத்தில் போய் புத்தியாய்ப் பேசினதினால், அவர்கள் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை வெட்டி யோவாபிடத்திலே போட்டார்கள். "(2சாமுயேல்20:22)

முற்றுகை உடனடியாக நீக்கப்பட்டது, யோவாப் எருசலேமுக்குத் திரும்பினான். இப்படியாக, இந்த ஞானமுள்ள ஸ்திரீ, தான் விரும்பிய நகரத்தார் அனைவரையும் காப்பாற்றினாள். (2சாமுயேல்20)

**தன் எஜமானை நேசித்த பெயரிடப்படாத அடிமை (2 இராஜாக்கள் 5:1-18)**

நாகமான் சிரியாவின் (ஆராம்) படைத் தளபதியாக இருந்தார். அவர் ஒரு சிறந்த போர்வீனும், அதிகாரியாக இருந்தபோதிலும், ஒரு குஷ்டரோகியாக இருந்தார். முன்பு, சிரிய இராணுவம் ஒரு சிறு பெண்ணை சிறைபிடித்தது. அவள் நாகாமானின் மனைவிக்கு ஊழியம் செய்தாள். நாகாமான் குணமடையும்படிக்கு, இஸ்ரயேலின் தலைநகரான சமாரியாவில் இருந்த தீர்க்கதரிசியாகிய எலிசாவை பார்க்கச் சொல்லி, சிறைபிடிக்கப்பட்ட அந்த சிறுமி பரிந்துரைத்தாள்.

இருப்பினும், ஒரு நாட்டின் தலைமை இராணுவ அதிகாரி, அதிகாரப்பூர்வ ஆவணங்கள் மற்றும் கணிசமான பரிசுகள் இல்லாமல் மற்றொரு நாட்டின் தலைநகருக்குச் செல்ல மாட்டார்கள். எனவே, சிரிய அரசன் ஆகாபின் குமாரன் யோராமுக்கு ஒரு கடிதம் அனுப்பினான் - "இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான், நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கி விட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக் கிறேன் என்று எழுதியிருந்தது. " (2இராஜாக்கள்5:6) யோராமுக்கு அவநம்பிக்கையும் சந்தேகமும் எழும்பியது. குஷ்டரோகம் குணப்படுத்த முடிாததாகக் கருதப்பட்டது. சிரியாவின் இராஜா "என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான்...." என்றார். (2இராஜாக்கள்5:7) ஆனால் அதைக் கேள்விப்பட்ட எலிசா, "அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரயேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று இராஜாவுக்குச் சொல்லியனுப்பினார்." (வசனம் 8)

நாகமான எலிசாவின் வீட்டிற்கு வந்து வாசலில் நின்றபோது, தீர்க்கதரிசி ஒரு ஊழியக்காரனை அனுப்பி, கிழக்கே 25 மைல் தொலைவில் உள்ள யோர்தான் நதியில் ஏழு முறை கழுவும்படி அறிவுறுத்தினார். தனது தலைநகரான தமஸ்குவுக்கு அருகில் உள்ள ஆறுகள் யோர்தான் நதியை விட தூய்மையானவை என்பதை நாகமான் உறுதியாக நம்பி கோபத்துடன் வெளியேறினான். ஆனால் நாகமானின் தோழர்கள் எலிசாவின் எளிய அறிவுரைகளைப் பின்பற்றும்படி அவரை வற்புறுத்தினார்கள், அதன் விளைவாக நாகமான் குணமடைந்தார். அவனுடைய தோல் ஒரு குழந்தையின் தோல் போல் ஆனது. "இதோ, இஸ்ரயேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கம் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்" (2இராஜாக்கள்5:15) என்ற நாகமானின் வார்த்தைகள் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரயேலின் ஒரு அன்பான சிறுமியின் மூலம், யெகோவா தேவன் ஒரு வலிமைமிக்க போர்வீரனின் பார்வையிலும், அவனுடைய அந்நியரின் பார்வையிலும் மகிமைப்படுத்தப்பட்டார்.

**தன் உயிரைப் பணயம் வைத்த விசுவாசமுள்ள ஒரு ஸ்திரீ**

யோசேபாள், (யெகோவாவின் ஆணை) உண்மையான அன்பிற்கு எடுத்துக்காட்டு. யூதாவின் இராஜாவாகிய அகசியா, இஸ்ரயேலின் இராஜாவாகிய ஆகாபின் குமாரன் யோராமுடன் கூட்டு சேர்ந்துபோது, இருவம் போரில் கொல்லப்பட்டனர். அகசியாவின் தாயான அத்தாலியாள், அரியணையைக்கைப்பற்றி, அவளது போட்டியாளர்களாக அகசியாவின் குமாரர்களைக் கொன்றாள். ஆனால் அகசியாவின் சகோதரியான யோசேபாள்,அகசியாவின் குழந்தை யோவாசைக் கொண்டுபோய் அவனையும் அவனுடைய தாதியையும் தேவனுடைய ஆலயத்தில் ஒளித்து வைத்தாள். (2இராஜாக்கள்11, 2 நாளாகமம் 22:10)

யோசேபாள் அந்த குழந்தையையும் யூதா

தேசத்தையும் நேசித்ததாலும், தன் உயிரையே பணயம் வைத்தாள். (ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, ஆசாரியனாகிய யோய்தா அத்தாலியாளைக் கொன்று, யோவாசை இராஜாவாக்கினார்.)

**மன்னிக்கப்பட்ட ஒரு பெண்**

ஒரு பாவியான ஸ்திரீ ஒரு பரிசேயிரின் வீட்டில் இயேசுவிடம் வந்து, தன் தண்ணீரால் இயேசுவின் பாதங்களைக் கழுவி, அபிஷேகம் செய்து, தன் தலைமுடியால் அவருடைய பாதத்தைத் துடைத்தாள். அவள் வெளிப்படையாக மன்னிப்பைத் தேடினாள். பரிசேயர் இயேசுவைக் கனப்படுத்தினாலும், அந்தப் பெண் மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு தகுதியற்றவள் என்று இகழ்ந்தார். "இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது, இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்பு கூறுவான்..." (லூக்கா7:36-50) அகாபே அன்பு (இரண்டு நிகழ்வுகளிலும் அகாபே அன்பு பயன்படுத்தப் படுகிறது) இதில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆழமான பாடம் இருக்கிறது. கிறிஸ்து மற்றவர்களுக்காகவும் மரித்ததினாலே, நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுவதன் மூலம் நம் ஆண்டவரின் கருணைக்கு நாம் நன்றிகளை வெளிப்படுத்தவேண்டும். (1தீமோத்தேயு2:6)

**இன்று கிறிஸ்த பெண்களுக்கான ஆலோசனை**

இந்த விசுவாசமுள்ள அனைத்து ஸ்திரீகளும், அன்பு எப்படி நம் தேவனுக்குப் பிரியமானது என்பதற்கான உதாரணங்களை வழங்கயுள்ளனர். அதேபோல, இன்று நம்பிக்கையுள்ள அனைத்து ஸ்திரீகளும் தங்கள் பிள்ளைகளுக்கு அன்பின் முன்மாதிரியாக இருக்கவேண்டு, அவர்களுக்கு சரியானதைக் கற்பிக்க வேண்டும். "தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள் "என்று பவுல் கூறுகிறார். (1தீமோத்தேயு2:15)

**"அன்பு" என்று பொருள்படும் வார்த்தைகளின் பின்குறிப்பு**

"நான் யாக்கோபை நேசித்து, ஏசாவை வெறுத்தேன்"(மல்கியா 1:2-3, ரோமர்9:13) என்று தேவன் சொன்னபோது, இது தேவன் யாக்கோபுக்கும் ஏசாவுக்கு செய்ததை வேறுப்படுத்தி காண்பிக்கக் கூடியதாக இருந்தது. இன்று ஜோர்டானின் ஏழ்மையான பகுதியாகிய தெற்குப் பகுதியில் ஏசாவின் வம்சம் காணப்படுகிறது. மல்கியா 1:2வில் உள்ள "அன்பிற்குரியவர்" என்பதற்கான வார்த்தை அகாபே/ஆகாவ், இது ரோமர் 9:13இல் உள்ள அகபேக்கு ஒத்திருக்கிறது. இரண்டுமே அன்பின் உயர்ந்த வடிவத்தைக் குறிக்கின்றன. தன்னலமற்ற அன்பு, தெய்வீக அன்பு. மத்தேயு இல், அகாபாவோ என்ற கிரேக்க வார்த்தையானது அகபேயின் வினை வடிவமாகும். (அகாப் என்ற எபிரெய வார்த்தை 200 முறையும், கிரேக்க வார்த்தைகளான அகாபாவோ 143 முறையும், அகாபே 116 முறையும் பயன் படுத்தப்படுகிறது.)

இதற்கு நேர்மாறாக, பிலியோ அன்பும் அதேபோல அன்பின் உயர் வடிவமாக உள்ளது - அன்பான கருணை, இரக்கம், உடன்பிறப்பு, குழந்தைகளின் மேலுள்ள அன்பு. பேதுருவின் "அன்பு" என்பதற்கான கிரேக்க வார்த்தை ஃபிலியோ ஆகும். இது பழைய ஏற்பாட்டில் செஸ்டு என்ற எபிரெய வார்த்தைக்கு ஒத்திருக்கிறது. (எடுத்துக்காட்டு - 1நாளாகமம் 19:2, அப்பொழுது தாவீது - ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் எனக்குத் தயவு செய்ததுபோல, நானும் அவன் குமாரனாகிய இவனுக்குத் தயவு செய்வேன் என்று சொல்லி.....) {செஸ்டு என்ற எபிரெய வார்த்தை 235 முறையும், கிரேக்க வார்த்தையாக ஃபிலியோ 25 முறையும் பயன்படுத்தப்படுகிறது.}

# மேலோட்டமான தீர்க்கதரிசனங்கள்
# ஒரு தாயின் அன்பு



***David Rice***

"குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது." (நீதிமொழிகள் *31:10*) — *David Rice*

**தா**யின் அன்பை விட விலை உயர்ந்தது எது? ஒரு தாய் தன் குழந்தையை ஒன்பது மாதங்கள் தன்னுடைய ஒரு பகுதியாகவே சுமக்கிறாள். அவள்அதையே தொடர்ந்து சிந்தித்து, வேதனை மற்றும் வலியின் மூலம் அதைப் பெற்றெடுக்கிறாள். தனக்கும் தன் அனுபவத்துக்கும் ஆழமாக இணைக்கும் விதத்தில் அவள் அந்த புதிய வாழ்க்கையை நேசிக்கிறாள். அந்த குழந்தை உள்ளுணர்வோடும், பராமரிப்பாளராகிய அதன் தாயுடன் இணைகிறது, மேலும் உணவு மற்றும் ஒவ்வொரு தேவைக்கும் அதன் தாயைச் சார்ந்துள்ளது. தாயின் ஒவ்வொரு வகையான கவனத்தையும் பெறுபவராக குழந்தை பரஸ்பர அன்பில் வளர்கிறது.

2 இராஜாக்கள் 4 :8- 37இல், அத்தகைய தாய் ஒரு விலையுயர்ந்த மற்றும் எதிர்பாராத, ஒரு சிறுவனிடம் அன்பு செலுத்துவதைப் பற்றிய ஒரு விவரிப்பை பார்த்தோம். வயது முதிர்ந்த கணவனும், குழந்தைகள் இல்லாத விசுவாசமுள்ள பெண்ணான சூனேமியாளின் கதை இது. அவள் ஒரு "கனம் பொருந்திய ஸ்திரீ" (வசனம் 8) என்று விவரிக்கப்படுகிறாள். வெளிப்படையாக, அவள் செல்வாக்கிலும், வசதியிலும் செல்வாக்குள்ள பெண்ணாக இருந்தாள்.

தீர்க்கதரிசியாகிய எலிசா அந்தப் பகுதியைக் கடந்து செல்லும்போது அவரைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற அவளது விருப்பத்தால் அவளுடைய விசுவாசம் வெளிப்பட்டது. "பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும் போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனை போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக்கொண்டாள், அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் கேட்டுக்கொண்டாள், அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம்பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்." (2இராஜாக்கள்4:8)

அவள் எலிசாவை தேவனுடைய மனுஷனாகப் போற்றினாள். "அவள் தன் புருஷனை நோக்கி- இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும் குத்துவிளக்கையும் வைப்போம், அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்." (2இராஜாக்கள்4:9, 10)

இந்த இரக்கம் கொடுக்கக்கூடிய ஒரு பெணின் விசுவாசத்தின் மூலம் வந்தது. அவளுடைய



*Elisha forteling that the woman would have a son*

இரக்கம் சிறிது காலம் தொடர்ந்தது. "அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம்பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்." (வசனம்8) இப்படிப்பட்ட உபகாரங்களுக்கு ஏதேனும் கைமாறு வழங்கப்படுவதற்கு வாய்ப்புண்டோ என்று பார்ப்பதற்கு, "இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?" (வசனம் 13)என்று ஒருநாள் எலிசா தனது பணியாளான கேயாசியிடம் தனது அன்பான ஆதரவாளரிடம் கேட்க்க சொன்னார்.

தொண்டு செய்த பெண்ணுக்கு எந்த கோரிக்கையும் இருக்கவில்லை. அவள் வெறுமனே சேவை செய்வதில் மகிழ்ச்சியடைந்தாள். என்ன ஒரு அருமையான சிந்தனை. "இராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேசவேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேட்ட போது.... அதற்கு அவள் என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் என்றாள். "(வசனம் 13)

எலிசா இந்த விஷயத்தை மேலும் யோசித்த போது, அவருடைய வேலைக்காரன் கேயாசி ஒரு அவதானிப்பு செய்தார். "அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான்."( வசனம் 14) இதன் விளைவாக, தேவனுடைய ஆவியால் தூண்டப்பட்ட எலிசா, "ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய் என்றார். " (வசனம் 16) என்று அவளை ஆசீர்வதித்தார். ஏதோ ஒரு குழந்தை அல்ல, ஒரு ஆண் குழந்தை வாக்களிக்கப்பட்டதை கவனிக்கவேண்டும். இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட, தேவனுடைய பரிசு. அந்த ஸ்திரீ தயங்கினாலும், ஒரு குமாரனைப் பெற்றாள். "எலிசா தன்னோடே சொன்னபடி, ஒரு உற்பத்திகாலத் திட்டத்தில் ஒரு குமாரனைப் பெற்றாள்."(வசனம் 17)

இனிய வருடங்கள் சென்றது. தீர்க்கதரிசியை அக்கறையோடு கவனித்தது போல, அவள் தன் குழந்தையையும் அக்கறையோடு கவனித்திருக்க வேண்டும். குழந்தை வளர்ந்தது, ஆனால் இன்னும் இளமையாக இருந்தபோது அவன் தனது தந்தைக்கு வயலில் அறுவடை செய்பவர்களுக்கு உதவ சென்றான். அந்த சந்தர்ப்பத்தில் அவன்


*Elisha tending to the boy*

நோய்வாய்ப்பட்டு, "என் தலை, என் தலை" என்று கூச்சலிட்டான். அவனை மேலும் கவனிப்பதற்கு அவனுடைய தாயிடம் அழைத்துச் செல்லப்பட்டார். "அவனை எடுத்து, அவன் தாயினிடத்தில் கொண்டுபோனபோது, அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான்." (வசனம் 20) அவளுடைய கவலை, பதட்டம், மென்மையான கவனிப்பு ஆகியவற்றை நாம் கற்பனை செய்து பார்த்தால், எதுவும் பயனளிக்கவில்லை, அவன் மரித்துபோனான்.

### இன்னும் என்ன செய்ய முடியும்?

சிறுவன் அனுபவித்த வலி, அவனுடைய தாயின் வேதனை, எல்லாம் கடுமையாக இருந்தது. படிப்படியாக ஒரு நிலை வந்தது. சிறுவன் நிம்மதியாக கிடந்தான், அவனுடைய தாயின் கவனிப்பு இனி அவனுக்கு தேவைப்படவில்லை. இருப்பினும், இந்த ஸ்திரீ தேவன் மீதும் அவளுடைய தீர்க்கதரிசி மீதும் விசுவாசமுள்ளவளாக இருந்தாள். தொலைதூர எதிர்காலத்தில் வரும் உயிர்த்தெழுதலில் அவளுக்கு விசுவாசம் இருந்திருக்கலாம். ஆனால் விசுவாசம் கைக்கு நெருங்கிய ஒன்றைப் பெற முடியுமா?

இது ஒரு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட குழந்தை, எனவே அவளுடைய நம்பிக்கையை தீர்க்கதரிசிக்கும், இதனால் தேவனுக்கும் இணைப்பது போல,"அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின் மேல் அவனை கிடத்தினாள்...." அவளுடைய விலையேறப்பெற்ற குழந்தை மீண்டும் வாழ்வேண்டும் என்ற ஏக்கம் .... எப்படிப்பட்ட நம்பிக்கைகள் அவளுக்குள் இருந்திருக்க வேண்டும்.

"தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி - நான்

சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய்வரும்படிக்கு, வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்பவேண்டும் என்று கொல்லச்சொன்னாள்" (வசனம் 22) அவளுடைய தேவைக்கக்காக வேகத்தை தாமதப்படுத்த வேண்டாம் என்று அவனுக்கு கட்டளையிட்டாள். "கர்மேல் பர்வதத் திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்திற்குப் போனாள்.." (2இராஜாக்கள்4:25)



அவள் நெருங்கி வருவதை எலிசா கண்டு, அவனுயைட வேலைக்காரன் கேயாசியை அவளிடம் விசாரிக்க அனுப்பினார். ஆனால் அவளோ தீர்க்கதரிசியை நேரடியாகப் பார்க்கும் வரை அவள் ஒன்றும் சொல்ல வில்லை. அவள் எலிசாவின் காலில் விழுந்து, அழுது மன்றாடினாள். "நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குடாரனை வேண்டும் என்று கேட்டதுண்டா ?" (வசனம் 28)என்றாள். அற்புதமான பரிசைப் பெற்ற பின், இவ்வளவு சீக்கரமாக அவளிடமிருந்து அது பறிக்கப்பட்டது எப்படி?

எலிசாவின் தடியை எடுத்துக்கொண்டு, அந்தப் பெண்ணுடன் சென்று, குழந்தை குணமடைய அதைக் குழந்தையின் மீது வைக்கும்படி எலிசா தன் வேலைக்காரன் கேயாசியிடம் கட்டளையிட்டார்.

இது செய்யப்பட்டது - ஆனால் எந்த பலனும் இல்லை. இருப்பினும், அவர்களை பின் தொடர்ந்த எலிசா, தனிப்பட்ட முறையில் அந்த குழந்தையை கவனித்து, அதன் மீது அவர் படுத்துகொண்டபோது, குழந்தையின் சரீரம் சூடானது, உயிர் மீட்கப்பட்டது, குழந்தை ஏழு முறை தும்மி, எழுந்தது. (2இராஜாக்கள்4:29-35)

அந்தப் பெண் நன்றியுடன், முதலில் எலிசாவிடம் சென்று அவன் காலில் விழுந்து தரை வரைக்கும் வணங்கி, நம்ப முடியாத மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தன் மகனை எடுத்துக் கொண்டாள். துக்கமடைந்த பல தாய்மார்கள் இன்னும் அதிக நேரம் காத்திருக்கவேண்டும். இந்த பெண்ணின் குழந்தை மீதான பாசமும், அவளது இழப்பின் ஆழமும், எண்ணற்ற பெண்களில் நிலையாகும். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளின் விலைமதிப்பற்ற வாழ்க்கை மீட்டெடுக்கப்படும் உயிர்த்தெழுதலில் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் - ஆனால் அவர்களின் விஷயத்தில் முடிவில்லாத வாழ்க்கையைப் பெறுவார்கள்.

**கதையின் பொருள்**

இந்த குறிப்பிடத்தக்க விவரிப்பு பரிசுத்த வேதாகமத்தில் பாதுகாக்கப்படுவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தது. இது தாயின் அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. அத்தகைய அக்கறையான பாசம் இல்லாமல், நெருங்கிய மற்றும் அன்பின் வாழ்க்கை எவ்வளவு வெற்றிடமாக இருக்கும். ஃபிலியோ அன்பு குடும்ப பாசத்தின் அரவணைப்பை பிரதிபலிக்கிறது, சூனேமியாள் பெண் அந்த சிறுவனின் கடைசி மூச்சு வரை அவனை தன் மடியில் வைத்து கவனித்துக்கொண்டாள்.

அகாபே அன்பு என்பது மற்றொருவரின் மீதான தன்னலமற்ற ஆர்வமாகும். அவளுடைய மகன் இறந்த பிறகும், தேவனுடைய உதவியை நாடுவதன் மூலம், இந்த ஸ்திரீயின் தொடர்ச்சியான முயற்சிகளில் இந்த அன்பு வெளிப்படுத்தப்படுகிறது. சூனேமியாளின் ஃபிலியோ மற்றும் அகாபே அன்பின் வெளிப்பாடு பெண்கள் மற்றும் ஆண்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரயேலை மீட்டெடுப்பதைப் பற்றிய தீர்க்கதரிசன பாடங்களும் இதில் அடங்கும். விசுவாசத்தால் அவர்களை மீண்டும் உயிர்ப்பிப்பார். தீர்க்கதரிசியாகிய எலியாவின் பணியும், அவருடைய ஊழியத்தின் போது நடந்த ஏழு அற்புதங்களும், சுவிசேஷ யுகத்தின் ஏழு நிலைகளில் தேவனுடைய வேலைகளைப் பிரதிபலிக்கின்றன. தீர்க்கதரிசியாகிய எலிசாவின் பணியும், அவருடைய ஊழியத்தின் போது நடந்த 14 அற்புதங்களும், மீட்பின் இரண்டாம் யுகமான ஆயிரமாண்டு யுகத்தில் தேவனுடைய வேலைகளைப் பிரதிபலிக்கின்றன.

7மற்றும் 14 என்ற எண்கள் சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிரமாண்டு யுகமும், புளிப்பில்லா அப்பப்பண்டிகை மற்றும் கூடாரப் பண்டிகையோடு இணைக்கப்படுகிறது. முதலாம் பண்டிகையின் போது, ஒவ்வொரு நாளும் ஏழு ஆட்டுக்குட்டிகள் பலியாக செலுத்தப்பட்டது - இரண்டாவது பண்டிகையின் போது ஒவ்வொரு நாளும் 14 ஆட்டுக்குட்டிகள் பலியாக செலுத்தப்பட்டது. (எண்ணாகமம்28:17-24, 29:12 மற்றும் தொடர்ந்து)

எலிசா சூனேமியாளின் மகனை எழுப்பியது இராஜ்ஜியத்துடன் தொடர்புடையது என்று இது அறிவுறுத்துகிறது. இந்த விஷயத்தில், இது இஸ்ரயேலின் மறுமலர்ச்சியைக் குறிக்கிறது. சிறுவன் அறுவடை நேரத்தில் இறந்துவிட்டான், இது யூத காலத்தின் அறுவடையைக் குறிக்கிறது. அந்த நேரத்தில் இஸ்ரயேல் மேசியாவைப் புரிந்துக் கொள்ளத் தவறியது, புலம்பெயர்ந்தோரின் போது ஆவிக்குரிய வாய்ப்புகளை இழந்தது. மதியம் தாயின் மடியிலேயே சிறுவன் இறந்தான். இயேசு சிலுவையில் தொங்கி மரித்த நேரமும் பகலில் இருள் சூழ்நத நேரமாக இருந்தது. (மத்தேயு27:45) அந்த இருள் இஸ்ரயேலின் ஆவிக்குரிய வாய்ப்புகள் மங்கி வருவதை மேலிருந்து ஒரு அடையாளமாக காட்டியது. தன் மகனைக் கவனித்துக்கொண்ட பெண், ஆகார் செய்தது போல், இஸ்ரயேலின் மீது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் அக்கறை மற்றும் வளர்ச்சிக்குரிய செல்வாக்கை அடையாளப் படுத்துகிறது.

எலிசாவைப் பார்ப்பதற்கு சூனேமியாள் ஸ்திரீ புறப்பட்டபோது, அவளுடைய கணவன், "இது அமாவாசியும் அல்ல, ஓய்வுநாளும் அல்லவே, நீ இன்றைக்கு அவரிடத்துக்குப் போகவேண்டியது என்ன என்று...." கேட்டான். (2இராஜாக்கள்4:23) அந்த குழந்தை இஸ்ரயேல் தேசத்தை அடையாளப் படுத்தும். அது வாக்குத்தத்தின் தேசத்திலடிருந்து சிதரடிக்கப்பட்டு, அலைந்து திரிந்த, சுவிசேஷ யுகத்தின் போது புத்துயிர் பெறாது. ஓய்வு நாள் மற்றும் அமாவாசை நாளை அடையாளப்படுத்தப்படும் தேவனுடைய இராஜ்யத்தில், அவர்கள் பெறும் விசுவாசத்தின் மூலம் அவர்களுக்கு ஆசீர்வாதம் வரும். "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுிறது என்னவென்றால், வேலைசெய்கிற ஆறுநாளிலும் கிழக்குக்கு எதிரான உட்பிராகாரத்தினுடைய வாசல் பூட்டப்பட்டிருந்தது, ஓய்வுநாளிலும் மாதப்பிறப்பிலும் திறக்கப்படக்கடவது."(எசேக்கியேல் 46:1)

சிறுவனை உயிர்ப்பிப்பதற்கான முதல் முயற்சி, எலிசாவின் வேலைக்காரன் கேயாகி, சிறுவன் மீது வைக்க எலிசாவின் தடியை எடுத்தான். இது தீர்க்கதரிசியின் வழிகாட்டுதலின் பேரில் நடந்தது. ஆனால், எதிர்பாராதவிதமாக அது பலனளிக்க வில்லை. எலிசா ஊழியரிடம் குறிப்பிட்டபடி, கடந்த கால தேவனுடைய தீர்க்கதரிசிகளின் போதனைகளும் ஊழியங்களும் இஸ்ரயேலில் நல்ல விளைவைக் கொண்டிருந்தாலும் இஸ்ரயேல் மீண்டும் தேவனுடைய பார்வையில் "வாழ்வதற்கான" போதுமான விசுவாசம் இல்லாதிருந்தது. இன்றும் கூட, எசேக்கியேல் 37:8 ல் அடையாளப்படுத்தப்படும் கூட்டிசேர்க்கப்பட்ட இஸ்ரயேல் தேசத்திற்கு "ஆவி இல்லை" என்று வாசிக்கிறோம்.

இஸ்ரயேல் தேசம் ஜீவனுள்ள விசுவாசத்தைப் பெற்று, மேசியாவினடத்தில் திரும்புவதற்கு பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் அவர்களின் தலைவர்களாகவும், அசிரியர்களாகவும் வரவேண்டும். மறுசீரமைக்கப்பட்ட சீரத்தின் (இஸ்ரயேல் தேசம்) மீது நான்கு காற்றுகள் ஊதப்படுவதன் விளைவாக இவர்கள் ஜீவன் பெறுவார்கள் என்று எசேக்கியேல் 37:9 கூறுகிறது. "ஆவியே நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார். "(எசேக்கியேல்37:9)

இவ்வாறு, இஸ்ரயேலின் கடைசி இக்கட்டு காலத்தில், ஏழு இராஜாக்கள் (மேய்ப்பர்கள் என்பது இராஜாக்களுக்கான ஒரு சொல் )மற்றும் எட்டு பிரபுக்கள் (பூமியின் மேல் பிரபுக்களாக இருக்கும் முற்பிதாக்கள்)ஆகியோரைக் கொண்டு கிறிஸ்து குறுக்கிடுவார் என்று மீகா 5:5 கூறுகிறது. இவர்கள் இஸ்ரயேலை அதன் பயங்கரமான அச்சுறுத்தலில் இருந்து விடுவித்து, ஒரு உயிருள்ள நம்பிக்கையை திரும்ப கொடுப்பார்கள். "யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப் போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள். "(மீகா5:7)

# இன்றைய தீர்க்கதரிசனம்
# உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கிறது
# ஒரு வருடமான போர்

"கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர் - மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டியது என்ன வென்றால் - கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருவேன்" (எசேக்கியேல் 38: 1-3)

**உ**க்ரைனுடனான போர் ஒரு வருடத்தை கடந்தது, ரஷ்யா ஒரு பெரிய மூலோபாய தோல்வியை சந்தித்துள்ளது, உக்ரைன் ஒரு மூலோபாய வெற்றியை அடைந்துள்ளது, மேற்கு நாடுகள் எதிர்பாராத தீர்மானத்தையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் இரண்டாம் உலகப் போரின் முதல் பெரிய வெற்றிக்குப் பிறகு வின்ஸ்டன் சர்ச்சில் கவனித்தபடி, "இது முடிவின் ஆரம்பம் அல்ல, ஆனால் தொடக்கத்தின் முடிவு. "வாக்னர் குழுவின் கூலிப்படை மூலம் ரஷ்யா பெரும் தாக்குதல்களை துரிதப்படுத்துகிறது, ஆனால் உக்ரைன் உறுதியாக நின்றது. இருப்பினும் முடிவே கண்ணுக்கு தென்படவில்லை. பிளிட்ஸ் கிரீக்கில் ரஷ்யா வெற்றிபெறத் தவறியது மற்றும் உக்ரைன் வெற்றியின் கணிப்புகள், இப்போது நீடித்த இக்கட்டு நிலைக்கு வழிவகுத்துள்ளன.

**ரஷ்யாவின் உத்தி**

விளாடிமிர் புடின் உக்ரைனைக் கைப்பற்றும் இலக்கில் உறுதியாக இருக்கிறார். மேற்கு நாடுகளின் பொருளாதாரத் தடைகளைத் தொடர்ந்து, மேற்குலகின் ஆழ்ந்த அறிவைக் கொண்ட இளம் தொழில் நுட்ப வல்லுநர்களை அதிகார பதவிகளுக்கு நகர்த்துவது உட்பட, அவர் ரஷ்யாவின் அரசாங்கத்தை மறுசீரமைத்து வருகிறார். அவர்கள் எண்ணெய் மற்றும் எரிவாயுக்கான புதிய சந்தைகளைத் திறந்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபியில் ஏழு சதவிகிதம் எரிசக்தி வருவாய்) சரிவை மாற்றியுள்ளனர். மேற்கில் படித்தவர்கள், வேலை செய்தவர்கள், ஆனால் ரஷ்யாவின் மீள் எழுச்சிக்கு விசுவாசம் கொண்ட புதிய வரவுகள் பேச்சுவார்த்தை அனுபவத்தையும் உலகளாவிய சந்தைகளின் அறிவையும் கொண்டு வருகிறார்கள். துணை நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட அலெக்ஸி சசானோவ், ஆக்ஸ்போர்டில் படித்தார் மற்றும் எர்ன்ஸ்ட் அன்ட் யங்க நிறுவனத்துடன் பல ஆண்டுகள் கழித்தார், மிக சமீபத்தில் அதன் மாஸ்கோ அலுவலகத்தில். புதிய துணை எரிசக்தி மந்திரி பாவெல் சொரோகின், நிதி மாவட்டமாகிய லண்டனின் முதிர்ச்சியடைந்தார், மோர்கன் ஸ்டான்லி முதலீட்டு வங்கியாளர்களின் பயிற்சியின் கீழ் வளர்ந்தார். ரஷ்யாவிற்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையிலான கூட்டாண்மையான OPEC+ ஐ வளர்ப்பதில் சொரோகின் முக்கிய பங்கு வகித்தார் (சவுதி அரேபியா மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் பிற உறுப்பினர்கள் போரை ஒரு சிக்கலான ஐரோப்பிய மோதலாக பார்க்கிறார்கள், ஆதலால் ரஷ்யாவிற்கு எதிராக பேசவில்லை) சமீபத்திய வோல் ஸ்ட்ரீட் பத்திரிக்கையின் கட்டுரையின்படி, திரு. புடின் சோரோகினை ரஷ்யவின் "ரகசிய ஆயுதம்" என்று அழைக்கிறார் என்றும் புடின்"சரளமாக ஆங்கிலம் பேசகூடிய, தேசியவாத சித்தாந்தத்தை கடைபிடிக்கும் இந்த புதியவர்களிடம் பெருகிய முறையில் திரும்பியுள்ளார்." என்றும் கூறுகிறார்.

போருக்கான மூன்று வெளிப்படையான விளைவுகளை கருத்தில் கொண்டு - ரஷ்யாவிற்கு வெற்றி, உக்ரைனுக்கு வெற்றி, அல்லது ஒரு இக்கட்டு நிலை, சர்வதேச அமைதிக்கான கார்னகி எண்டோவ்மென்ட் ஒரு நீண்ட போரில், படைகளின் தொடர்பு ரஷ்யாவிற்கு வெற்றியை சாதகமாக்குகிறது என்று அனுமானித்தது. போருக்கு முன்பு, அதன்

மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) உக்ரைனை விட ஒன்பது மடங்கு அதிகமாக இருந்தது. 2022 இல் 3-4 சதவீத சரிவு தற்காலிகமானது, மெதுவான வளர்ச்சி 2023 இல் மீண்டும் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாற்று விநியோகச் சங்கிலிகள், குறைந்த தொழில் நுட்ப மாற்றீடுகள் மற்றும் உதிரிபாகங்களுக்கான மாற்றீடுகள் ஆகியவற்றுடன் ரஷ்யாவின் தழுவல், இந்த புதிய மூளை சக்தியின் உதவியுடன் இந்தயாவிற்கும் சீனாவிற்கும் எண்ணெயை விற்கவும், ஒரு கடற்படையைப் பெறவும் அனுமதித்தது. இது மேற்கத்திய தடைகளை புறக்கணிக்க ரஷ்யாவிற்கு வழிவகுத்தது.

ரஷ்யாவின் போருக்கு முந்தைய ஜனங்களின் தொகை உக்ரைனை விட மூன்று மடங்கு அதிகமாக இருந்தது. ரஷ்யாவின் பகுதி பத்திரமாக உள்ளது, குண்டுவீச்சு அச்சுறுத்தலின் கீழ் இல்லை. அதன் தற்காப்பு தொழிற்சாலைகள் 24-7 செயல்படுகின்றன மற்றும் புடின் தனது படைகளுக்கு வழங்குவதற்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்க உறுதியளித்துள்ளார். அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் படி, உக்ரைனில் உள்ள இலட்சக் கணக்கான படைவீரூர்கள் சிறைகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளனர். வீரர்களுக்கு வெற்றி அல்லது மரணம் தவிர வேறு வழியில்லை (ஒரு வீடியோவில் தளபதி யெவ்ஜெனி பிரிகோஜின் பின்வாங்கும் சிப்பாயை சம்மட்டியை கொண்டு கொலைசெய்ததை காட்டியது)

துணிச்சலான மக்கள் என்றாலும், உக்ரைனின் பாதுகாப்பை நிலைநிறுத்தும் திறன் முற்றிலும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவைச் சார்ந்துள்ளது. போர் தொடங்கியதில் இருந்து ஜிடிபி மூன்றில் ஒரு பங்காக குறைந்துள்ளது. மேலும் புனரமைப்பு செலுவகள் இப்போது ஒரு டிரில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது என்று கார்னகி நிறுவனம் தெரிவித்துள்ளது. பல குடிமக்கள் நிரந்தரமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

புடின் அணுசக்தி தாக்குதலின் தீவிரத்தை புரிந்திருக்கிறார் ஆனால் கிரிமியாவை இழக்கும் வாய்ப்பு, ஒரு அவமானகரான தோல்லியைத் தவிர்ப்பதற்காக அத்தகைய நடவடிக்கைக்கு தூண்டுதலாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறிகின்றனர். தெற்கில் உக்ரேனிய முன்றேற்றம் போரை முடிவுக்கு கொண்டு வராமல், அதை வியத்தகு முறையில் அதிகரிக்கலாம் என்று கார்னகி குழு முடிவு செய்தது.

## கடைசிகால தீர்க்கதரிசனத்தில் ரஷ்யாபின் பங்கு

"இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும், நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத் தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி..... சகல ஜாதிகளே, நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள்.... ஜாதிகள் எழும்பி யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக, சுற்றிலுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன்." (யோயேல்3: 1 - 12)

இஸ்ரயேலை அற்புதமாக மீட்பதன் மூலம் தேவன் தன்னை தேசங்களுக்கு வெளிப்படுத்து வதற்கு முன்னதாக, எதிர்காலத்தில் ஒரு தீர்க்கமான போரில் ஈடுபடுவதற்காக இஸ்ரயேலை எதிர்த்து நாடுகள் ஒரு பெரிய கூட்டமைப்பை செய்யும் என்று யோயேல் எழுதுகிறார்." ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, கோகை நோக்கிச் சொல்லவேண்டியது என்னவென்றால் - கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.... அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள், அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து....என் ஜனமாகிய இஸ்ரயேலுக்கு விரோதமாக எழும்பிவருவாய், கடைசி நாட்களிலே இது சம்பவிக்கும், கோகே, ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உன் மூலமாய் நான் பரிசுத்தர் என்று விளங்கப்படுகிறதினால் அவர்கள் என்னை அறியும்படிக்கு உன்னை என் தேசத்துக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்" (எசேக்கியேல்38: 14-16) எசேக்கியேல் தீர்க்கதரிசி, கோகின் படைகளால் வழிநடத்தப்பட்ட இந்த இராணுவப் படையெடுப்பு பற்றிய விரிவான மற்றும் துல்லியமான விளக்கத்தை அளிக்கிறார், ஆனால் இஸ்ரயேலின் தோல்வியி லிருந்து அது என்ன பெற முடியும் என்பதில் தேவன் ஆர்வமாக இருக்கிறார் என்றும் கூறுகிறார். "நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல்

கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப்போவேன்." (எசேக்கியேல்38: 10-12)

இஸ்ரயேலுக்கு எதிராக வரப்போகும் திரளான படைகளின் தலைவரான கோகுக்கு எதிராக தீர்க்கதரிசனம் சொல்லும்படி தேவன் எசேக்கியேலிடம் கூறினார். எசேக்கியேல் வடக்கை நோக்கியிருந்தார், பொதுவாக, கோகின் படைகளை உள்ளடக்கிய மக்கள் அந்த பகுதியிலிருந்து வருவார்கள் என்பதைக் குறிக்கிறது. கோக், மாகோக் (ரஷ்யா) நாட்டிலிருந்து வரும் முன்னணி கதாபாத்திரம், மேசேக்கும் தூபாலும் l உடன்வருவார்கள்.

செப்டுவஜின்ட் இஸ்ரயேல் மீதான இந்த படையெடுப்பிற்கு முன் ஒரு நீண்ட தயாரிப்பு காலத்தை குறிக்கிறது - "அநேக நாட்களுக்குப் பிறபாடு நீ விசாரிக்கப்படுவாய்"(வசனம் 8)இப்போதும் மனுபுத்திரனே, நீ கோகுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால் - கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் துபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருகிறேன். நான் உன்னைத் திருப்பி உன்னை ஆறு துறடுகளால் இழுத்து, உன்னை வடபுறங்களிலிருந்து எழும்பவும் இஸ்ரயேல் மலைகளில் வரவும்பண்ணி," (எசேக்கியேல்39: 1-2)

கோகை திருப்பி, அவனுடைய தாடைகளில் கொக்கிகள் போடப்பட்டு, அவன் இஸ்ரயேலுக்கு இழுக்கப்படுவான். கோக் என்று அழைக்கப்படும் இந்த உருவக அல்லது அடையாளப்பூர்வ ஆளுமையை புனித பூமிக்கு வரச் செய்வதற்கு வலுவான செல்வாக்கு கொண்டுவரப்படும் என்று இந்த வார்த்தைகள் தெரிவிக்கின்றன. அது என்னவாக இருக்கும் என்பது இன்னும் தெளிவாகத் தெரிய வேண்டும்.

இந்தப் படையெடுப்பின் நேரத்தின் மீது தெய்வீக மேற்பார்வை, "உன்னைத் திருப்பி" என்பதற்கான எபிரெய வார்த்தையிலிருந்து தெளிவாகிறது. இது எபிரெயத்தில் "ஷப்" ஆகும், அதாவது "உள்ளே வரச் செய்வது" அல்லது உண்மையான தாக்குதலைச் செய்வது. இந்தப் போரைப் பற்றிய மூன்று முக்கிய தீர்க்கதரிசனங்களை யோயேல் 3, ஏசாயா 34 மற்றும் வெளிப்படுத்துதல் 16 இல் காணலாம். இவை ஒரே நிகழ்வை வெவ்வேறு கண்ணோட்டங்களில் விவரிக்கின்றன - ஒரு பெரிய போர், மற்றும் ஒரு இராணுவ தாக்குதலை விட அதிகமான நிகழ்வுகள்.

இந்த சுவிசேஷ யுகத்தின் சபை முதலில் நிறைவே வேண்டும் (வெளிப்படுத்துதல்7:1-3) கடந்த தலை முறையில், எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறியதை நாம் கண்டிருக்கிறோம். இந்த தீர்க்கதரிசனத்திற்கு இணங்க, ரஷ்யா ஒரு தீவிரமான, வெற்றியடையக்கூடிய சக்தியாக உருவெடுத்துள்ளது. தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கு உலகம் சாட்சியாக இன்னும் எத்தனை ஆண்டுகள் உள்ளன என்பது நமக்குத் தெரியாது. அப்போது தான் மக்கள் தேவனை அங்கீகரிப்பார்கள், முதலில் ஆபிரகாமின் சந்ததியுடன் (ஆதியாகமம்22:17) செய்யப்பட்ட புதிய உடன்படிக்கையின் மூலம் நீதியைக் கற்றுக் கொள்வார்கள்.

And Mary said, My soul doth magnify the Lord, And my spirit hath rejoiced in God my Saviour.

For he hath regarded the low estate of his handmaiden: for, behold, from henceforth all generations shall call me blessed.

For he that is mighty hath done to me great things; and holy is his name.

And his mercy is on them that fear him from generation to generation.

He hath shewed strength with his arm; he hath scattered the proud in the imagination of their hearts.

He hath put down the mighty from their seats, and exalted them of low degree.

He hath filled the hungry with good things; and the rich he hath sent empty away.

He hath holpen his servant Israel, in remembrance of his mercy;

As he spake to our fathers, to Abraham, and to his seed for ever.

Luke 1:46-55, KJV

